தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம்

(Information and communication Techology)

ஆசிரியர் வழிகாட்டி
தரம் 8

(2018 இலிருந்து அமுல்படுத்துவதற்கானது)

Teachers' Guide

Grade 8

தகவல் தொழில்நுட்பத் துறை
தேசிய கல்வி நிறுவகம்
மகரகம
இலங்கை
www.nie.lk

தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம்

தரம் 8 – ஆசிரியர் வழிகாட்டி

© தேசிய கல்வி நிறுவகம்
முதலாம் பதிப்பு 2018

ISBN:

தகவல் தொழில்நுட்பத் துறை
விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பப் பீடம்
தேசிய கல்வி நிறுவகம்
மகரகம.

www.nie.lk

அச்சிடப்பட்டது

உள்ளடக்கம்	பக்க இலக்கம்
பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி	i
கலைத்திட்டக் குழு	ii-iii
அறிமுகம்	iv
தேசிய இலக்குகள்	v
அடிப்படை தேர்ச்சிகள்	vi-vii
பாடத்திட்டத்தின் நோக்கங்கள்	viii
ஒவ்வொரு அலகிற்குமான பாடவேளைகள்	ix
பாடத்திட்டம்	1-4
கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள்	5 - 73
சிங்கள தமிழ் சொற்களஞ்சியம்	74 - 84

பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி

2007 ஆம் ஆண்டு நடைமுறையிலிருந்த உள்ளடக்கத்தை அடிப்படையாகக் கொண்ட பாட விதானத்தை நவீனப்படுத்தி, தேசிய கல்வி நிறுவகம், ஆரம்ப, இடைநிலைக் கல்விப் பரப்புக்களின் எட்டு வருட சுழற்சி முறையான, புதிய தேசிய மட்டப் பாடவிதானத்தின் முதல் பாகத்தினை அறிமுகப்படுத்தியது. தேசிய கல்வி ஆணைக்குழுவினால் முன்மொழியப்பட்ட தேசிய கல்வி இலக்குகளை அடிப்படை நோக்காகக் கொண்டு, இது செயற்படுத்தப்பட்டதுடன் பொதுத் தேர்ச்சிகளை விருத்தி செய்து வந்தது. பல்வேறுபட்ட கல்வியாளர்களால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளினதும், கருத்துக்களினதும் பொருத்தப்பாட்டுடன் பகுத்தறிவு வாதத்தினை அடிப்படையாகக் கொண்டு பாடவிதானம் நடைமுறைப்படுத்தப்பட்டது.

அதன் தொடர்ச்சியாகப் பாடவிதானச் சுழற்சியின் இரண்டாம் பாகம் 2015 ஆம் ஆண்டில் இருந்து கல்வி முறையில் அறிமுகப்படுத்தப்பட்டு வருகின்றது. இந்தப் பகுத்தறிவுவாத நடைமுறையின் கடைநிலையிலிருந்து உயர்நிலை வரை அனைத்துப் பாடங்களிலும் ஒழுங்குபடுத்தப்பட்ட முறையில் தேர்ச்சிகளை வளர்த்தெடுப்பதற்காக, கீழிருந்து மேல்நோக்கிய நடைமுறைப்படுத்தப்படும் அணுகுமுறை பயன்படுத்தப்படுகிறது.

ஒரே பாடத்தின் உள்ளடக்கத்தினை ஏனைய பாடங்களிலும் மீண்டும் பாவிப்பதனைக் குறைப்பதற்காகவும், பாடத்தின் நோக்கங்களை மட்டுப்படுத்துவதற்காகவும், செயற்படுத்தக்கூடியதான மாணவர் மையப் பாடவிதானம் ஒன்றை உருவாக்கும் நோக்கிலும் கிடையான ஒருங்கிணைப்பானது செயற்பட்டு வருகின்றது. ஆசிரியர்களிற்கு, அவர்களது வகுப்பறைக் கற்பித்தல்களை வழிப்படுத்துவதற்கு அவசியமான வழிகாட்டுதல்களை வழங்குவதற்காகவும், தங்களைக் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளில் பொருத்தப்பாட்டுடன் வகுப்பறை அளவீடுகளையும் மதிப்பீடுகளையும் பொருத்தமாகப் பயன்படுத்திக் கொள்வதனை நோக்கமாகக் கொண்டு புதிய ஆசிரிய வழிகாட்டி நூல்கள் அறிமுகப்படுத்தப்படுகிறது.

இந்த வழிகாட்டி நூல்கள், ஆசிரியரை ஒரு பொருத்தப்பாடுடைய ஆசிரியராக வகுப்பறையில் செயற்பட வைக்கின்றது. இந்த வழிகாட்டி நூல்களினூடாக, ஆசிரியர்கள் தங்கள் மாணவர்களின் தேர்ச்சிகளை வளர்த்தெடுக்கத் தேவையான தர உள்ளீடுகளையும், செயற்பாடுகளையும் தாங்களாகவே தெரிந்தெடுக்கும் சுதந்திரத்தினையும் பெற்றுக்கொள்கின்றனர். விதந்துரைக்கப்பட்ட பாடப் பரப்புக்களின் பாரிய சுமைகள் இல்லாதொழிக்கப்படுகிறது. ஆதலால், இப்புதிய ஆசிரிய வழிகாட்டி நூல்கள் முழுப்பயன்பாடு உடையவையாவதற்கு, கல்வி வெளியீட்டாளர்களினால் வெளியிடப்படும் விதந்துரைக்கப்பட்ட பாட நூல்களின் உச்சப்பயன்பாட்டினைப் பெற்றுக் கொள்வது அவசியமாகின்றது. இப்புதிய பகுத்தறிவுவாத பாடவிதானத்தினதும், புதிய ஆசிரிய வழிகாட்டி நூல்கள், புதிய பாடநூல்களினதும் அடிப்படைக் குறிக்கோள், மாணவர்களை ஆசிரிய மையக் கல்வியிலிருந்து விடுவித்து, செயற்பாடுகளுடன் கூடிய மாணவர் மையக்கல்வியினை நடைமுறைப்படுத்தக்கூடிய கல்வி முறைமையினால், பூகோள தொழில் சந்தைகளுக்குத் தேவையான தேர்ச்சிகளும் திறன்களும் மிக்க மனித வளத்தினை வழங்கக்கூடிய மாணவர்களின் எண்ணிக்கையினை விருத்தி செய்யக்கூடியதாயிருத்தலேயாகும்.

இந்தச் சந்தர்ப்பத்தில் இந்நிறுவகப் பேரவையின் அங்கத்தவர்களுக்கும், கல்வி அலுவல்கள் சபையின் அங்கத்தவர்களுக்கும், இவ்வாசிரியர் வழிகாட்டி நூல்களின் உருவாக்கத்திற்குப் பங்களிப்புச் செய்த வளவாளர்களுக்கும் மற்றும் இவ்வுயரிய நோக்கத்திற்காக அர்ப்பணிப்புடன் பணியாற்றிய அனைவருக்கும் எனது நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

கலாநிதி. திருமதி. ஜயந்தி குணசேகர

பணிப்பாளர் நாயகம்

தேசிய கல்வி நிறுவகம்

கலைத்திட்டக் குழு

ஆலோசனையும் வழிகாட்டலும்	கல்விசார் அலுவல்கள் சபை, தேசிய கல்வி நிறுவகம்
பாட இணைப்பு	திருமதி. எம். என். பி. மதுமகே விரிவுரையாளர், தகவல் தொழில்நுட்பத்துறை தேசிய கல்வி நிறுவகம்
வளப் பங்களிப்பு	
திரு. டீ. அனுரா ஜெயலால் *(M.Sc., PG in Ins Design, PGDE, B.Sc.)*	பணிப்பாளர், தகவல் தொழில்நுட்பத்துறை தேசிய கல்வி நிறுவகம்
திரு. எஸ். சண்முகலிங்கம் (*M.Sc., PGDE*)	சிரேஷ்ட விரிவுரையாளர், தகவல் தொழில்நுட்பத்துறை தேசிய கல்வி நிறுவகம்
திருமதி. எம். என். பி. மதுமகே (*PGDE, B.A.*)	விரிவுரையாளர், தகவல் தொழில்நுட்பத்துறை தேசிய கல்வி நிறுவகம்
திருமதி. ஜி. டீ. டபிள்யு. எம். ஆரியரத்ன (*M.Sc., B.Sc.*)	உதவி விரிவுரையாளர், தகவல் தொழில்நுட்பத்துறை, தேசிய கல்வி நிறுவகம்
கலாநிதி. பி. எம். டி. பி. சன்திரிகம (*Ph.D*)	சிரேஷ்ட விரிவுரையாளர், பேராதனைப் பல்கலைக்கழகம்
கலாநிதி. எச். எல். பிரேமரத்ன (*Ph.D*)	சிரேஷ்ட விரிவுரையாளர், கொழும்புப் பல்கலைக்கழகம்
கலாநிதி. பி. ரிஸ்கான் *(Ph.D, M.Ed., P.G.D.E, B.Sc)*	விரிவுரையாளர், மாகாவலி தேசிய கல்வியற் கல்லூரி, பொல்கொல்ல
பி. என் டபிள்யு. எல். கே. பிரேமரத்ன (*M.Sc., B.Sc.*)	ஆசிரியர், மகளிர் உயர்தரப் பாடசாலை, கண்டி
எம். இந்திரபாலன் *(M.Sc)*	ஆசிரியர், மானிப்பாய் இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம்
தினுஷா விஜயசேன *(PGDE, B.Sc.)*	ஆசிரியர், எவ் மரியா கன்னியர் மடம், நீர்கொழும்பு
ஏ. பி. என். டி சில்வா *(PGDE, B.Sc.)*	ஆசிரியர், திரு/ ஜே, ஆர், எஸ் டி அல்மேடா- மகா வித்தியாலயம், அக்குரஸ
பி. எச். சிராணி *(PGDE, B.Sc.)*	ஆசிரியர், திரு / தெலிஜாவில்ல மத்திய கல்லூரி
எஸ். சர்வேஸ்வரன் *(B.IT, B.Ed.)*	ஆசிரியர், வ/சைவப்பிரகாச மகளிர் கல்லூரி, வவுனியா

கே. பி. ஐ. விஜேரத்ன *(PGD (IT))*	தகவல் தொடர்பாடல் போதனாசிரியர், மயூரபாதா மத்திய கல்லூரி
ஏ. ஜி. ஜி. யு. பிரேமலால் *(PGDE, B.Sc.)*	ஆசிரியர், கேஜி பஸ்னாகல மகா-வித்தியாலயம், நூரியா
என். டி. சமரசிங்க *(PGD (IT), PGDE, B.Sc.)*	நிலைய முகாமையாளர், CRC, பி /ஆனந்த மத்திய மகா வித்தியாலயம், ஹல்தும்முள்ள
வை. டி. வி. பத்திரன	ஓய்வுப் பெற்ற போதனாசிரியர்
பி. பிரேமிளா *(M.A., PGD(Computer Science), PGDE, B.Sc.)*	ஆசிரியர், றோயல் கல்லூரி, கொழும்பு 07
ஏ. எம். வசீர் *(Dip in ICT)*	நிலைய முகாமையாளர், CRC, கஹாகொல்ல மத்திய மகா வித்தியாலயம், தியத்தலாவ.
கே. பண்டிதரத்ன *(Ph.D)*	ஆசிரியர், மலியதேவா கல்லூரி, குருணாகல்

அறிமுகம்

உலகளாவிய ரீதியில் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில் நுட்பம் ஒரு கருவியாக இனங்காணப்பட்டதுடன் நிறுவன பணியின் உற்பத்தித்திறன் வினைத்திறன் மற்றும் விளைத்திறன் என்பவற்றை மேம்படுத்தல் மற்றும் தனிநபர்களின் நாளாந்த செயற்பாடுகள் போன்றவற்றிற்குப் பயன்படுத்த முடியும். எனவே ICT யின் அறிவு மற்றும் திறன்களின் போதிய மட்டங்களை கல்வியின் பல்வேறு மட்டங்களில் வழங்குதலானது மாணவர்களின் முன்னேற்றத்திற்கும் தேசிய அபிவிருத்தியை நோக்கி பங்களிப்புச் செய்வதற்கும் முக்கியமானதாகும்.

இலங்கையில் தற்போதைய இரண்டாம் நிலை கல்வி முறைமையில் ICT யானது CAL, GCE (O/L) இற்கான ICT, தரம் 12 இல் GIT மற்றும் A/L தொழினுட்ப பாடப்பிரிவில் ஒரு கூறாக ICT என இவற்றின் மூலமாக கணிசமாக ICT வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இதன் விளைவாக தேர்ச்சியைப் பேணுவதற்காக தரம் 6 தொடக்கம் 9 வரை ICT பாடம் நடைமுறைப்படுத்த வேண்டிய தேவை தோன்றியுள்ளது.

கற்கை உருவாக்க காலப்பகுதி தரம் 6 முதல் 9 வரையாகும். கணினியில் கோட்பாட்டு ரீதியாக கற்பிப்பதிலும் பார்க்க செய்முறை பகுதிகள் மூலம் ஆர்வத்தை தூண்டி ஊக்கத்தையும் வழங்குவது விரும்பத் தகுந்தது. இதனால் கோட்பாடு மற்றும் செய்முறை பகுதிகள் இரண்டிற்கும் இடையில் ஒரு சமநிலை அடையப்படுகின்றது. இச் சமநிலையை அடைவதற்காக நவீன தொழினுட்பங்கள் உள்ளடக்கத்தில் சேர்க்கப்பட்டுள்ளது.

இதனை மையமாகக் கொண்டு கலைத்திட்டக் குழு ICT *இல் உயர்கல்விக்கான அடித்தளம் இடுதல்,* தேர்ச்சிகளை நாளாந்த செய்முறை சூழ்நிலைக்குப் பிரயோகித்தல், ICT அறிவினை வளர்த்தல் மற்றும் அவர்களை சர்வதேச தரத்திற்கு வெளிப்படுத்தல் ஆகியவற்றுக்காக கோட்பாடு மற்றும் செயல்முறை சமநிலையிலான தேர்ச்சியை உருவாக்கியது.

தேசிய இலக்குகள்

1. மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் எனும் எண்ணக்கருவுக்குள் தேசியப் பிணைப்பு, தேசிய முழுமை, தேசிய ஒற்றுமை, இணக்கம், சமாதானம் என்பவற்றை மேம்படுத்தல் மூலமும் இலங்கைப் பன்மைச் சமூகத்தின் கலாச்சார வேறுபாட்டினை அங்கிகரித்தல் மூலமும் தேசத்தினைக் கட்டியெழுப்புதலும் இலங்கையர் என்ற அடையாளத்தை ஏற்படுத்துதலும்.

2. மாற்றமுறும் உலகத்தின் சவால்களுக்குத் தக்கவாறு முகங்கொடுத்தலோடு தேசிய பாரம்பரியத்தின் அதி சிறந்த அம்சங்களை அங்கிகரித்தலும், பேணுதலும்.

3. மனித உரிமைகளுக்கு மதிப்பளித்தல், கடமைகள், கட்டுப்பாடுகள் பற்றிய விழிப்புணர்வு, ஒருவர் கொண்டுள்ள ஆழ்ந்த இடையறாத அக்கறையுணர்வு, என்பவற்றை மேம்படுத்தும் சமூக நீதியும் ஜனநாயக வாழ்க்கை முறை நியமங்களும் உள்ளடங்கிய சுற்றாடலை உருவாக்குதலும் ஆதரித்தலும்.

4. ஒருவரது உள, உடல் நலனையும் மனித விழுமியங்களுக்கு மதிப்பளிப்பதை அடிப்படையாகக் கொண்ட நிலைபேறுடைய வாழ்க்கைக் கோலத்தை மேம்படுத்தல்.

5. நன்கு ஒன்றிணைக்கப்பட்ட சமநிலை ஆளுமைக்குரிய ஆக்க சிந்தனை, தற்துணிவு, ஆய்ந்து சிந்தித்தல், பொறுப்புக்கூறல், வகைகூறல் மற்றும் உடன்பாடான அம்சங்களை விருத்திசெய்தல்

6. தனிநபரதும் தேசத்தினதும் வாழ்க்கைத்தரத்தைப் போஷிக்க கூடியதும் இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிக்கக் கூடியதுமானஆக்கப்பணிகளுக்கான கல்வியூட்டுவதன் மூலம் மனித வள அபிவிருத்தியை ஏற்படுத்தல்

7. தனிநபர்களின் மாற்றத்திற்கேற்ப இணங்கி வாழவும், மாற்றத்தை முகாமை செய்யவும் தயார்படுத்தவும் கட்டுப்படுத்தவும் விரைவாக மாறிவரும் உலகில் சிக்கலானதும், எதிர்பாராததுமான நிலைமைகளைச் சமாளிக்கும் தகைமையை விருத்திசெய்தல்.

8. நீதி சமத்துவம் பரஸ்பர மரியாதை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு சர்வதேச சமுதாயத்தில் கௌரவமானதோர் இடத்தைப் பெறுவதற்குப் பங்களிக்கக் கூடிய மனப்பாங்குகளையும் திறன்களையும் வளர்த்தல்.

(தேசிய கல்வி ஆணைக்குழுவின் அறிக்கை - 2003)

அடிப்படைத் தேர்ச்சிகள்

கல்வியினூடாக விருத்தி செய்யப்படும் பின்வரும் அடிப்படைத் தேர்ச்சிகள் மேற்குறித்த தேசிய இலக்குகளை அடைவதற்கு வழிவகுக்கும்.

1. தொடர்பாடல் தேர்ச்சிகள்

தொடர்பாடல் பற்றிய தேர்ச்சிகள் நான்கு துணைத் தொகுதிகளை அடிப்படையாகக் கொண்டவை. எழுத்தறிவு, எண்ணறிவு, சித்திரஅறிவு, தகவல் தொழினுட்பத் தகைமை.

எழுத்தறிவு : கவனமாகச் செவிமடுத்தல், தெளிவாகப் பேசுதல், கருத்தறிய வாசித்தல், சரியாகவும் செம்மையாகவும் எழுதுதல், பயன்தரும் வகையிலான கருத்துப் பரிமாற்றம்

எண்ணறிவு : பொருள், இடம், காலம் என்பவற்றுக்கு எண்களைப் பயன்படுத்தல், எண்ணுதல், கணித்தல், ஒழுங்கு முறையாக அளத்தல்

சித்திரஅறிவு:கோடு, உருவம் என்பவற்றின் கருத்தை அறிதல். விபரங்கள், அறிவுறுத்தல்கள், எண்ணங்கள் ஆகியவற்றைக் கோடு, உருவம், வர்ணம், இரண்டு மற்றும் மூன்று பரிமாணக் கட்டமைப்புக்கள் என்பவற்றால் வெளிப்படுத்தலும் பதிவுசெய்தலும்

தகவல் தொழினுட்பத் தேர்ச்சிகள்:

கணினி அறிவு–கற்றலில், தொழில் சுற்றாடலில், சொந்த வாழ்வில் தகவல் தொடர்பாடல் தொழினுட்ப கற்றல் திறனை (ICT) பயன்படுத்தல்

2. ஆளுமை விருத்தி தொடர்பான தேர்ச்சிகள்:

- ஆக்கம், விரிந்த சிந்தனை, தற்றுணிபு, தீர்மானம் எடுத்தல், பிரச்சினை விடுவித்தல், நுணுக்கமான மற்றும் பகுப்பாய்வுச் சிந்தனை, அணியினராகப் பணி செய்தல், தனியாள் இடைவினைத் தொடர்புகள், கண்டுபிடித்தலும் கண்டறிதலும் முதலான திறமைகள்
- நேர்மை, சகிப்புத்தன்மை, மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் ஆகிய விழுமியங்கள்
- நுண்ணறிவு

3. சூழல் தொடர்பான தேர்ச்சிகள்

இது சமூகம், உயிரியல் மற்றும் பௌதிகம் தொடர்பான , இரண்டாவது தேர்ச்சித் தொகுதி.

சமூகச் சூழல்: தேசிய பாரம்பரியம் பற்றிய விழிப்புணர்வு பன்மைச் சமூகத்தின் அங்கத்தவர்கள் என்ற வகையில் தொடர்புறும் நுண்ணுணர்வுத் திறன்களும், பகிர்ந்தளிக்கப்படும் நீதி, சமூகத் தொடர்புகள், தனிநபர் நடத்தைகள், பொதுவானதும் சட்டபூர்வமானதுமான சம்பிரதாயங்கள், உரிமைகள், பொறுப்புக்கள், கடமைகள், கடப்பாடுகள் என்பவற்றில் அக்கறையும்

உயிரியல் சூழல்: வாழும் நாடு, மனிதன், மரங்கள், காடுகள், கடல்கள், நீர், வளி, வாழும் தாவரம், விலங்கு மற்றும் மனித வாழ்வுதொடர்புபட்ட விழிப்புணர்வு மற்றும் திறன்.

பௌதிகச் சூழல்: இடம், சக்தி, எரிபொருள், சடப்பொருள், பொருள்கள் பற்றியும் அவை மனித வாழ்க்கை, உணவு, உடை, உறையுள், சுகாதாரம், சௌகரியம்,

சுவாசம், நித்திரை, இளைப்பாறுதல், ஓய்வு, கழிவுகள், உயிரின கழிவுப் பொருட்கள் ஆகியவற்றுடன் கொண்டுள்ள தொடர்பு பற்றிய விழிப்புணர்வும், நுண்ணுணர்வுத் திறன்களும் கற்றலுக்கும் வேலை செய்வதற்கும் வாழ்வதற்கும் கருவிகளையும் தொழினுட்பங்களையும் பயன்படுத்தும் திறன்களும் இங்கு உள்ளடக்கப்பட்டுள்ளன.

4. வேலை உலகத்திற்குத் தயார் செய்தல் தொடர்பான தேர்ச்சிகள்

அவர்களது சக்தியை உச்ச நிலைக்குக் கொண்டு வருவதற்கும் அவர்களது ஆற்றலைப் போஷிப்பதற்கும் வேண்டிய தொழில்சார் திறன்களான பொருளாதார விருத்திக்குப் பங்களித்தல், அவர்களது தொழில் விருப்புகளையும் உளச்சார்புகளையும் கண்டறிதல், அவர்களது ஆற்றல்களுக்குப் பொருத்தமான வேலையைத் தெரிவு செய்தல், பயனளிக்கக்கூடியதும் நிலைபேறுடையதுமான ஜீவனோபாயத்தில் ஈடுபடல் போன்றவற்றிற்குப் பங்களிப்புச் செய்தல்.

5. சமயமும் ஒழுகலாறும் தொடர்பான தேர்ச்சிகள்

இது மதிப்பு மற்றும் பண்பு சம்பந்தமான நான்காவது தேர்ச்சித் தொகுதியாகும். அன்றாட வாழ்க்கையில் மிகப் பொருத்தமானவற்றைத் தெரிவு செய்யவும், நாளாந்த வாழ்க்கையில் ஒழுக்கநெறி, அறநெறி, சமய நெறி தொடர்பான நடத்தைகளைப் பொருத்தமுற மேற் கொள்ளவும் விழுமியங்களைத் தன்மயமாக்கிக் கொள்ளலும் உள்வாங்கலும்

6. ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தல், விளையாட்டு பற்றிய தேர்ச்சிகள்

அழகியற்கலைகள், இலக்கியம், விளையாட்டு, மெய்வல்லுநர் போட்டிகள், ஓய்வு நேரப் பொழுதுபோக்குகள் மற்றும் வாழ்வின் ஆக்கபூர்வச் செயற்பாடுகள் மூலம் வெளிப்படுத்தப்படும் இன்ப நுகர்ச்சி, மகிழ்ச்சி, மனவெழுச்சிகள், போன்றவை மனித அனுபவங்கள்

7. “கற்றலுக்குக் கற்றல்” தொடர்பான தேர்ச்சிகள்

விரைவாக மாறுகின்ற, சிக்கலான, ஒருவரில் ஒருவர் தங்கி நிற்கின்ற உலகொன்றில், ஒருவர் சுயாதீனமாகக் கற்பதற்கான வலிமையளித்தலும் மாற்றியமைக்கும் செயன்முறை ஊடாக, மாற்றத்திற்கேற்ப, இயங்கவும் அதனை முகாமை செய்யவும் வேண்டிய உணர்வையும் வெற்றியையும் பெறச்செய்தல்.

பாடத்தின் நோக்கங்கள்

இப்பாட விடயம் மூலம் அடையப் பெற்ற நோக்கங்கள்

- அடிப்படைத் திறன்விருத்தி மூலம் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழினுட்ப வளங்களின் பயன்பாடு.
- தகவல் மற்றும் தொடர்பாடல் தொழினுட்ப வளங்கள் பயன்பாட்டின் மூலம் அடிப்படையான சிறந்த பயிற்சிகளை ஆழப் பதியவைத்தல்.
- அடிப்படைக்+ கணினி எழுத்தறிவை ஆழப் பதியவைப்பதுடன் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழினுட்பக் கல்வியில் மேலும் தொடர் விருத்திக்கு அடித்தளமிடல்.

ஓவ்வொரு அலகிற்கும் பரிந்துரைக்கப்பட்ட பாடவேளைகளின் எண்ணிக்கை

தவணை	தேர்ச்சி மட்டம்	பாடவேளைகளின் எண்ணிக்கை
1ம் தவணை	1.1, 1.2	05
	2.1, 2.2	04
	3.1	01
2ம் தவணை	3.1	05
	4.1, 4.2	05
3ம் தவணை	4.2	02
	5.1	05
	6.1, 6.2	03
மொத்தம்		30

தரம் 08
தகவல் தொடர்பாடல் தொழினுட்பவியல்

தேர்ச்சி	தேர்ச்சி மட்டம்	விடய உள்ளடக்கம்	கற்றல் பேறுகள்	பாட வேளைகள்
1. கணினியில் தரவுகளும் அறிவுறுத்தல்களும் எவ்வாறு பிரதிநிதித்துவப் படுத்தப்பட்டுள்ளன என்பதை ஆராய்வார்	1.1.தசம எண்களைத் துவித எண்ணிற்கும் துவித எண்களைத் தசம எண்ணிற்கும் மாற்றுவார்	• எண்முறைமையின் அறிமுகம் ○ தசம மற்றும் துவித எண்முறைமைகள் ○ தசம எண்களைத் துவித எண்களாக மாற்றல் ○ துவித எண்களைத் தசம எண்களாக மாற்றல்	i. பத்தினையும் இரண்டினையும் அடியாகக் கொண்ட எண்களை விபரிப்பார் ii. தசம எண்களைத் துவித எண்களுக்கும் துவித எண்களை தசம எண்களுக்கும் மாற்றுவார்	03
	1.2கணினியில் தொழிற்படும் (துவிதக் கொள்கை) தர்க்கத்தைப் பாராட்டுவார்	• 0 மற்றும் 1 இனைப் பயன்படுத்தித் தரவுகளைப் பிரதிநிதித்துவப் படுத்தல் • கணினிப் பாகங்களுக்கிடையில் துவித தரவுப் பாய்ச்சல்	i. தசம நேர் எண்களைத் துவித எண்களுக்கு மாற்றுவார் ii. bitmap படிமம் ஒன்றைப் பயன்படுத்தித் திரையில் படிமம், எழுத்து(Alpha numeric, குறியீடுகள்) போன்றனவற்றைக் காட்சிப்படுத்தும் முறையை விளக்குவார்	02
2. இயக்க முறைமையைப் பயன்படுத்தி கணினியினை வினைதிறனுடனும், விளைதிறனுடனும் பயன்படுத்துவார்	2.1. உள் அமைவுகளையும் அமைப்புக்களையும் மேற்கொள்வதற்கு இயக்க முறைமையைப் பயன்படுத்துவார்	• பிராந்திய அமைப்புக்கள் – நேரம், திகதி, நாணயம், இலக்க வடிவம் • கோப்புப் பண்புகள் • கோப்புத் தேடல்	i. அமைப்புக்களை மேற்கொள்வார் – திகதி, நேரம், நாணயம், எண் வடிவங்கள் ii. கோப்புப் பண்புகளை மாற்றுவார் – வாசிப்புமட்டும், மறைக்கப்பட்டது, இருப்பிடம், அளவு iii. நீட்சியினைக் கொண்டு கோப்புக்களைத்	02

			தேடுவார்	
	2.2.கணினிகளின் அடிப்படைப் பிரச்சினைகளைச் சரிசெய்தல் மற்றும் பராமரிப்பு என்பவற்றை மேற்கொள்வார் (வன்பொருள் மற்றும் மென்பொருள்)	• கணினிகளின் சிறிய பிழைகளைத் திருத்துதல் • வன்பொருள் சிக்கல்கள் (விசைப்பலகை, சுட்டி, மின்வடம், வலையமைப்பு வடம், VGA வடம்) • ஒலி வெளியீட்டு சிக்கல்கள் (speaker இணைப்பு, ஒலி அளவினைச்(volume) சரிசெய்தல்) • துறைகளின் இணைப்பு (PS/2, USB, Micro USB VGA, HDMI, Parallel, RJ45,Memory Card Reader) • கணினி மென்பொருள் பிழையறிந்து தீர்வு காணல் • சீர்குலைந்த மென்பொருள் (Corrupt software) • வெறும் திரை Blank Desktop.	i. சில வன்பொருள் தொடர்பான பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பார் ii. மென்பொருள் தொடர்பான சிக்கல்களுக்குத் தீர்வு காண்பார்	02
3. நாளாந்தச் செயற்பாடுகளில் சொல்முறை வழிப்படுத்தல் மென்பொருளினைப் பயன்படுத்துவார்	3.1 ஆவணமொன்றினை உருவாக்குவதில் சொல்முறை வழிப்படுத்தல் மென்பொருளின் அடிப்படைச் செயற்பாடுகளைப் பின்பற்றுவார்.	• ஆவணமொன்றினை உருவாக்குதல், திறத்தல், சேமித்தல் மற்றும் மூடுதல் • வாசகத்தின் வடிவமைப்பு • கோப்பு மற்றும் பொருள் என்பனவற்றினை உள்ளீடு செய்தல்(வாசகம், படம், வடிவங்கள்,சிறுபடம்,சொல் வரைவியல் போன்வை. • அட்டவணையினை உள்ளீடு செய்தல் • எழுத்துப்பிழைகளையும் இலக்கணப் பிழைகளையும் பரிசோதித்தல் • பட்டியல்கள்	i. சொல்முறைவழிப்படுத்தல் மென்பொருளினைப் பயன்படுத்தி வடிமைக்கப்பட்ட ஆவணமொன்றினை உருவாக்குவார்	06

4. தொடரி, தெரிவு, என்பன அடங்கிய எளிய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு பாய்ச்சற்கோட்டு வரைபடத்தினைப் பயன்படுத்துவார் மற்றும்செய் நிரல்களை விருத்தி செய்வார் (Using scratch)	4.1. பிரச்சினையினைப் பகுப்பாய்வு செய்வார்	• உள்ளீடு, முறைவழியாக்கம், வெளியீடு என்பவற்றின் படிநிலைகளை அடையாளம் காணல் • செல்லிட மற்றும் சூட்டிகைக் கருவிகள் என்பனவற்றின் பிரயோகங்களினை அடையாளம் காணல் • பாய்ச்சற்கோட்டு வரைபடத்தினைப் பயன்படுத்தித் தீர்வுகளை ஆவணப்படுத்தல்	i. நாளாந்த வாழ்வில் எதிர்கொள்ளும் எளிய பிரச்சினைகளைப் பகுப்பாய்வு செய்வார் ii. பிரச்சினையினைத் தொகுதி (Block)வரைபடம் ஊடாக விபரிப்பார் iii. செல்லிட மற்றும் சூட்டிகைக் கருவிகளின் பிரயோகங்கள் பற்றி விளக்குவார்	02
	4.2. எளிய செய்நிரலினை விருத்திசெய்வதற்குக் கட்டுப்பாட்டு அமைப்புக்களைப் பயன்படுத்துவார்	• எளிய நெறிமுறை மற்றும் தெரிவுகளின் கட்டுப்பாட்டுக் கட்டமைப்பு என்பவற்றின் அறிமுகம் • கட்புல செய்நிரலாக்க மொழியின் (இடைமுகமொன்றினைப் பயன்படுத்தல்) உதவியுடன் எளிய (தொடரி மற்றும் தெரிவு உள்ளடங்கலாக) செய்நிரலொன்றின் விருத்தி	i. கட்டுப்பாட்டுக் கட்டமைப்புகளை விபரிப்பார் (தெரிவு மட்டும்) ii. நாளாந்த வாழ்வில் ஏற்படும் எளிய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குக் கட்டுப்பாட்டுக் கட்டமைப்புகளைப் பிரயோகிப்பார்	05
5. செயல்நிரல் தர்க்கங்களை செயல்படுத்துவதற்குப் பௌதீக கணித்தல் மென்பொருள் பொதியைப் பயன்படுத்துவார்	5.1. பௌதீக கணித்தல்களைச் செய்வதற்கு எளிய வன்பொருள் சாதனத்தைப் பயன்படுத்துவார்	• பௌதிக கணித்தல் சாதனத்தின் கூறுகள் • கட்டுப்பாட்டுக் கருவிகள் • LED களை ஒளிரச் செய்தலும் அணைத்தலும் • எளிய செயல் நிரலினை கொண்டு LED கோலங்களை உருவாக்குதல்	i. வெளியான சுற்றின் இரண்டு தர்க்க மட்டங்களினைச் செயற்படுத்தக் கூடியவாறான செய்நிரலொன்றினை வடிவமைத்தல் ii. பௌதிகக் கருவிகளில் செய்நிரல்களை அமுல்படுத்தல் உதாரணம்- பெறுமதிகளை	05

			வழங்கி LED இனை ஒளிரச்செய்தல்	
6. இணையத்தைப் பயன்படுத்திக் கல்வி பற்றிய தகவல்களை ஆராய்வார்	6.1 இணையத்தில் தகவல்களைத் தேடுவார்	• தேடுபொறிகள்: Google, Yahoo போன்றன • கல்விசார் வலை மேலோடிகள்	i. தேடுபொறிகளை அடையாளம் காண்பார் ii. இணையத்தினைப் பயன்படுத்தித் தகவல்களைத் தேடுவார்	01
	6.2 உயர்தர அம்சங்களை உள்ளடக்கிய எளிய இணையத் தளங்களை உருவாக்குவார்	• ஒட்டுக்கள் (Tags), கூறுகள்(Elements), பண்பு (Attributes), வாசக வடிமைத்தல் (Text formatting) போன்றவை • மீயிணைப்பிலுள்ள உயர்தர அம்சங்கள்	i. குறித்த விபரக் குறிப்புகளுக்கு ஏற்ப இணையத்தளங்களை வடிவமைப்பார் ii. வடிவமைப்பிற்கேற்ப இணையத்தளத்தினை விருத்தி செய்வார்	02
			மொத்தம்	30

கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள்

தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் விரைவாக மாறுகின்ற ஒரு படமாக இருப்பதால் மாணவர்கள் சமீபத்திய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்த ஆர்வமாக உள்ளனர். செய்முறைப் பயிற்சிகள் மூலம் ஒவ்வொரு மாணவனுக்கும் உண்மையான கைப்பழக்க அனுபவத்தைப் பெற்றுக் கொடுக்கவும். விரிவுரை அடிப்படை விடயங்களைக் செய்முறைப் பயிற்சிகள் மூலம் அவர்களை நம்பவைக்க அனுமதிக்கவும்.

இப்பாடம் முக்கியமாகச் செய்முறை மையமாக இருப்பதனால் முன்மொழியப்பட்ட கற்பிபத்தல் முறையானது மாணவர் மையமாக இருக்க வேண்டும் என்பது அவசியமாக உள்ளது. சுய கற்றலுக்காக மாணவர்களை ஊக்குவிப்பதற்கு சிறப்புக் கவனம் செலுத்த வேண்டியுள்ளது. ICT பாடத்தில் பெற்றுக் கொண்ட தேர்ச்சிகளை ஏனைய பாடங்களின் கற்றல் கற்பித்தல் செயல்முறையை மேம்படுத்துவதற்கு வழிகாட்டவும்.

பாடம் சம்பந்தமான பழைய சமூகக் கருத்துகளும் சட்டச் சிக்கல்களும் சுய ஒழுக்கம் பற்றிய உணர்வு மற்றும் மனநிலைகளில் தவிர்க்க முடியாத தூண்டுதல்களைக் கொண்டு வருகின்றன. கணினிப் பயன்பாட்டின் முக்கியத்துவத்தை முன்னிலைப்படுத்தக் கற்றல் கற்பித்தல் மதிப்பீட்டு செயல்முறை மிகவும் ஒழுங்கமைக்கப்பட வேண்டியது அவசியமாயுள்ளது.

மாணவர்கள் குழுச் செயற்பாடுகளில் பங்குகொள்வதை ஆர்வமூட்டி புதிய விடயங்களைக் கற்றுக்கொள்வதற்கும், தங்கள் கண்டுபிடிப்பை மற்றவர்களுடன் ICT ஊடகவும் கைமுறையினாலும் பகிர்ந்து கொள்வதற்கும் அவற்றை நம்பச் செய்வதற்கும் ஊக்கமளிக்கப்பட வேண்டும்.

தேர்ச்சி 1: கணினியில் தரவுகளும் அறிவுறுத்தல்களும் எவ்வாறு பிரதிநிதித்துவப் படுத்தப்பட்டுள்ளன என்பதை ஆராய்வார்

தேர்ச்சி மட்டம் 1.1: தசம எண்களைத் துவித எண்களுக்கும் துவித எண்களைத் தசம எண்களுக்கும் மாற்றுவார்

பாடவேளைகள் : 03

கற்றல் பேறுகள்:

- பத்தினையும் இரண்டினையும் அடியாகக் கொண்ட எண்களை விபரிப்பார்
- தசம எண்களைத் துவித எண்களுக்கும் மற்றும் துவித எண்களைத் தசம எண்களுக்கும் மாற்றுவார்

விடய உள்ளடக்கம்:

- எண் முறைமையின் அறிமுகம்
  - தசம மற்றும் துவித எண் முறைமைகள்
  - தசம எண்களைத் துவித எண்களாக மாற்றல்
  - துவித எண்களைத் தசம எண்களாக மாற்றல்

எண்ணக் கருக்களும் முதன்மைப் பதங்களும்:

- எண் முறைமைகள்
- துவித எண்கள்
- தசம எண்கள்
- தசம எண் முறைமை அடி 10 ஐக் கொண்டதுடன் 0 முதல் 9 வரையான 10 எண்கள் பயன்படுத்தப்படுகின்றன.
- துவித எண் முறைமை அடி 2 ஐக் கொண்டதுடன் 0 மற்றும் 1 ஆகிய இரு எண்கள் பயன்படுத்தப்படுகின்றன.
- தசம மற்றும் துவித எண்களை மாற்றல்

பாடத் திட்டமிடலுக்கான வழிகாட்டி:

- தசம எண்களின் இடப் பெறுமானம்
- மேற்கூறப்பட்ட கட்டமைப்பைப் பயன்படுத்தித் துவித எண் முறைமையைக் கட்டியெழுப்பவும்
- தசம எண்களைத் துவித எண்களாக மாற்றும் விதம் பற்றிக் கலந்துரையாடவும்
- துவித எண்களைத் தசம எண்களாக மாற்றும் விதம் பற்றிக் கலந்துரையாடவும்

கணிப்பீட்டிற்கும் மதிப்பீட்டிற்குமான வழிகாட்டி:

- தசம எண்களைத் துவித எண்களாகவும் துவித எண்களைத் தசம எண்களாகவும் மாற்றுவதைப் பரீட்சயப் படுத்திக் கொள்வதற்குப் போதுமான வினாக்களை வழங்கவும்

தரவிருத்தி உள்ளீடுகள்

- அபகஸ், இணைய வசதி, எண் முறைமைகள் தொடர்பான முன்வைப்புகள்
- https://www.includehelp.com/computer-number-systems.aspx

வாசிப்புப் பத்திரம்

தசம எண்களும் இடப் பெறுமானமும்

தசம எண் முறைமை 0 முதல் 9 வரையான பத்து (10) எண்களைக் கொண்டது. ஒவ்வொரு எண்ணும்(பெறுமதி) 0,1,2,3,4,5,6,7,8,9ஆகிய வற்றினால் பிரதிநிதித்துவம் செய்யப்படுகின்றது. தசம எண் முறைமையில் 10 எண்கள் மாத்திரம் பயன்படுத்தப்படுவதால் இது அடி 10 ஆகும்.

இடப் பெறுமானங்களை அடையாளம் காண்பதற்கு அபகஸைப் பயன்படுத்தலாம்.



படம் 1.1.1. எண் 162 இன் இடப்பெறுமானங்கள்

துவித எண்கள்

துவித எண் முறைமை அடி 2 ஐக் கொண்டதுடன் 0 மற்றும் 1 ஆகிய எண்கள் இவ்வெண் முறைமையில் பயன்படுத்தப்படுகின்றது.

துவித அடி = 2

	Column 8	Column 7	Column 6	Column 5	Column 4	Column 3	Column 2	Column 1
Base^{exp}	2^7	2^6	2^5	2^4	2^3	2^2	2^1	2^0
Weight	128	64	32	16	8	4	2	1

$2^0 = 1$

$2^1 = 2$

$2^2 = 2 * 2 = 4$

$2^3 = 2 * 2 * 2 = 8$

$2^4 = 2 * 2 * 2 * 2 = 16$

$2^5 = 2 * 2 * 2 * 2 * 2 = 32$

$2^6 = 2 * 2 * 2 * 2 * 2 * 2 = 64$

$2^7 = 2 * 2 * 2 * 2 * 2 * 2 * 2 = 128$

படம் 1.1.1. துவித எண்களின் இடப்பெறுமானங்கள்

தசம எண்களைத் துவித எண்களாக மாற்றல்

1. எண்ணை 2 இனால் வகுக்கவும்
2. வரும் விடையை (ஈவு) எழுதி மீண்டும் வகுப்பதற்கு வைத்துக் கொள்ளவும்
3. மீதியை ஈவின் வலது பக்கத்தில் எழுதவும்
4. மேலுள்ள படிமுறைகளை ஈவு பூச்சியமாகும் வரை மீளச் செய்யவும்



படம் 1.1.3. தசம எண் 19 இனை துவித எண்ணாக மாற்றல்

துவித எண்களைத் தசம எண்களாக மாற்றல்

1. துவித எண்ணை எழுதவும்
2. வலமிருந்து இடமாக இரண்டின் அடுக்குகளைப் பட்டியலிடவும்
3. துவித எண்ணின் இலக்கங்களை அவற்றின் தொடர்புடைய அடுக்குகளுக்குக் கீழே எழுதவும்
4. துவித எண்ணில் உள்ள இலக்கங்களை அவற்றிற்குரிய அடுக்குகளுடன் இணைக்கவும்.
5. ஒவ்வொரு இரண்டின் அடுக்கினதும் இறுதிப் பெறுமானங்களை எழுதவும்



படம் 1.1.4. தசம எண்ணிலிருந்து துவித எண் மாற்றீடு

தேர்ச்சி 1: கணினியில் தரவுகளும் அறிவுறுத்தல்களும் எவ்வாறு பிரதிநிதித்துவப் படுத்தப்பட்டுள்ளன என்பதை ஆராய்வார்

தேர்ச்சி மட்டம் 1.2: கணினியில் தொழிற்படும் (துவிதக் கொள்கை) தர்க்கத்தைப் பாராட்டுவார்

பாடவேளைகள: 02

கற்றல் பேறுகள்:

- தசம நேர் எண்களைத் துவித எண்களுக்கு மாற்றுவார்
- ஒரு bitmap படிமம் ஒன்றைப் பயன்படுத்தித் திரையில் படிமம், எழுத்து (எண்ணெழுத்துக் குறியீடாக்கம்) போன்றனவற்றைக் காட்சிப்படுத்தும் முறையை விளக்குவார்.

விடய உள்ளடக்கம்:

- 0 மற்றும் 1 ஐப் பயன்படுத்தித் தரவுகளைப் பிரதிநிதித்துவப் படுத்தல்
- கணினிப் பாகங்களுக்கிடையில் துவித தரவுப் பாய்ச்சல்

எண்ணக் கருக்களும் முதன்மைப் பதங்களும்:

- தரவு பிரதிநிதித்துவம்
- துவித தரவுப் பாய்ச்சல்

பாடத் திட்டமிடலுக்கான வழிகாட்டி:

- கணினிகள் உலகத்தை எவ்வாறு பார்க்கின்றன.
- பிட், பைட் மற்றும் துவிதம்
- தரவைப் பிரதிநிதித்துவப் படுத்தல்
    - கணினியில் வாசகப் பிரதிநிதித்துவம்
    - கணினியில் படிமப் பிரதிநிதித்துவம்
    - பிட் படங்கள் (Bitmaps)
    - படிமங்களில் வர்ணப் பிரதிநிதித்துவம்
    - கணினியில் ஒலிப் பிரதிநிதித்துவம்

கணிப்பீட்டிற்கும் மதிப்பீட்டிற்குமான வழிகாட்டி:

- ஒரு கணினியை மாதிரியாகப் பயன்படுத்துவதன் மூலம் கணினிக்கு உள்ளீடு செய்யப்படும் எண்களைத் துவித எண்களாக எந்தச் சந்தர்ப்பத்தில் எவ்வாறு மாற்றும் என்பதை விளக்கவும். நாடகத்தின் ஒரு பகுதியாக இதைச் செய்ய முடியும், மேலும் எந்தத் தரவு எவ்வாறு ஒரு புள்ளியிலிருந்து இன்னொரு இடத்திற்குப் கடந்து செல்கின்றது என்பதையும் காட்டலாம்.

தரவிருத்தி உள்ளீடுகள்

- மின் குமிழ்களைப் பயன்படுத்திப் பிட் மற்றும் பைட் அளவு மாதிரியுரு
- கறுப்பு மற்றும் வெள்ளைக் காகிதங்களைப் பயன்படுத்திக் கையால் உருவாக்கப்பட்ட எளிய பிட்பட (Bitmap) படிமம்
- https://www.quora.com/How-does-the-computer-understands-images-and-audios
- https://www.cs.cmu.edu/~fgandon/documents/lecture/uk1999/binary/HandOut.pdf

வாசிப்புப் பத்திரம்

கணினிகள் உலகை எவ்வாறு பார்க்கின்றன

கணினிகள் தகவலைக் கொண்டு பல விடயங்களைச் செய்யும் இயந்திரங்கள் ஆகும். ஆவணங்களை, படங்கள், காணொளிகள், ஒலி, விரிதாள்கள் மற்றும் தரவுத்தளங்களில் தகவலைப் பார்க்கலாம், கேட்கலாம், உருவாக்கலாம் மற்றும் திருத்தலாம்.

கணினிகளை எளிதாக உருவாக்கல் மற்றும் அவற்றை நம்பகமானதாக வைத்திருத்தல் போன்ற அனைத்தையும் இரண்டு பெறுமானங்கள் மட்டுமே பிரதிநிதித்துவம் செய்கின்றன.

நீங்கள் இந்த இரண்டு பெறுமானங்கள் 0 மற்றும் 1 எனக் குறிப்பிடப்பட்டிருப்பதை பார்க்கலாம். ஆனால் ஒரு கணினியில் இருக்கக்கூடிய எந்தவொன்றையும் அவை இரு நிலைகளில் இருக்கக்கூடியவாறு பிரதிநிதித்துவப்படுத்துகின்றன.

பிட் மற்றும் துவிதம்

கணினிகள் துவித இலக்கங்கள் - இலக்கங்கள் 0 மற்றும் 1 – தரவைச் சேமிப்பதற்கு பயன்படுத்துகின்றன. துவித எண் அல்லது பிட்(binary digit bit - bit) ஆனது கணித்தல்களில் மிகவும் சிறிய அலகாகும். இது 0 அல்லது 1 இனால் பிரதிநிதித்துவப்படுகின்றது.

துவித எண்கள் துவித இலக்கங்கள் மூலம் உருவாக்கப்பட்டுள்ளது (பிட்கள்),

உ-ம். துவித எண் **1001.**

கணினியில் அனைத்து விடயங்களும் 1 களினதும் 0 களினதும் தொடரான (மின் துடிப் புள்ள (on) அல்லது மின்துடிப்பற்ற (off)) மின் சமிக்ஞைகளைக் கொண்டே மேற்கொள்ளப்படுகிறது. இந்தத் தரவு 1 களினதும் 0 களினதும் தொடரான வரிசைப் படுத்தல் மூலம் பிரதிநிதித்துவம செய்யப்படுகிறது.



படம் 1.2..1 துவித எண் 10101000 தொடரான 1 க்கள் மற்றும் 0 ங்களினால் பிரதிநிதித்துவப்படுகின்றது(on and off).

கணினியில் முறைவழியாக்கப்பட வேண்டிய அனைத்துத் தரவுகளும் அவ்வாறான துவித வடிவமைப்பிற்கு மாற்றப்பட வேண்டும்

பிட்டுகளும் பைட்களும்

பிட்டுகள் இலகுவாக தொழிற்படக்கூடிய வகையில் குழுக்களாக்கப்படலாம்

- **அரை பைட் (Nibble)** - 4 bits (பைட்டின் பாதி)
- **பைட் (Byte)** - 8 bits (8 பிட்டுகளின் குழு பைட் எனப்படும்)
- **கிலோ பைட்** (Kilobyte -KB) - 1000 bytes
- **மெகா பைட்** (Megabyte -MB) - 1000 kilobytes
- **கிகா பைட்** (Gigabyte -GB) - 1000 megabytes
- **டெரா பைட்** (Terabyte -TB) - 1000 gigabytes

கணினி ஒரு இலக்கத்தை அல்லது ஒரு எழுத்துருவைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு 8 பிட்டுகளைப் (1 பைட்) பயன்படுத்துகிறது.

தரவு பிரதிநிதித்துவப்படுத்தல்

கணினியினுள் அனைத்துத் தரவுகளும் ஒரு தொடரான மின் சமிக்ஞைகளாக கடத்தப்படுகின்றன. இணைப்பில்(**on**) அல்லது இணைப்பின்மை (**off**.) ஆகும்.

எனவே, கணினி, வாசகம், படிமங்கள் மற்றும் ஒலி உட்பட எந்த வகையான தரவுகளையும் முறைவழியாக்குவதற்கு, அவை துவித வடிவமாக மாற்றப்பட வேண்டும்.



படம் 1.2.2 வாசக, படிமங்கள் மற்றும் ஒலி ஆகியவற்றைக் கொண்ட தரவுகள் துவிதமாக மாற்றப்படும்

கணினியில் வாசகத்தினைப் பிரதிநிதித்துவப்படுத்தல்

விசைப்பலகையில் எந்த ஒரு சாவியை அழுத்தும் போதும், அது துவித எண்ணாக மாற்றப்பட வேண்டும், இதன் மூலம் மையச் செயற்பாட்டு அலகில் முறைவழியாக்கப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்ட எழுத்துத் திரையில் தோன்றும்.



ஆங்கில எழுத்து ‘A’ 01000001 எனும் துவித இலக்கத்தினால் பிரதிநிதித்துவம் செய்யப்படுகிறது. (இது தசம பெறுமானம் 65 ஆகும்)

ஒவ்வொரு எண்ணும் பரிதிநிதித்துவம் செய்யும் ஒரு எழுத்துருவைக் குறிக்கும் குறியீடானது வாசகத்தைத் துவிதமாக மாற்றப் பயன்படுகிறது. இதற்கு நாம் பயன்படுத்தக்கூடிய ஒரு குறியீடு ASCII என்று அழைக்கப்படுகிறது. ASCII குறியீடானது விசைப்பலகையின் ஒவ்வொரு வரியுருவிற்கும் ஒரு துவித எண்ணை ஒதுக்குகிறது. உதாரணத்திற்கு:

படம் 1.2.3 எழுத்து ‘A’ இன் துவித எண் மாற்றல்

- ஆங்கில எழுத்து ‘a’ 01100001 எனும் துவித இலக்கத்தினால் பிரதிநிதித்துவம் செய்யப்படுகிறது. (இது தசமப் பெறுமானம் 97 ஆகும்)
- ஆங்கில எழுத்து ‘b’ 01100010 எனும் துவித இலக்கத்தினால் பிரதிநிதித்துவம் செய்யப்படுகிறது. (இது தசமப் பெறுமானம் 99 ஆகும்)
- ஆங்கில எழுத்து ‘c’ 01100011 எனும் துவித இலக்கத்தினால் பிரதிநிதித்துவம் செய்யப்படுகிறது. (இது தசமப் பெறுமானம் 99 ஆகும்)

ASCII குறியீட்டினால் 128 எழுத்துருக்களை மட்டுமே சேமிக்க முடியும், இது ஆங்கில மொழிக்குப் போதுமானதாக அமைகின்ற போதிலும் வேறு சில மொழிகளுக்குப் போதுமானதாக இல்லை. ஜப்பானிய , சீன மற்றும் மாண்டரின் போன்ற அதிக எழுத்துக்களை நீங்கள் பயன்படுத்த விரும்பினால், மேலதிக எழுத்துக்கள் தேவைப்படும். எனவே, யூனிகோட் என்று அழைக்கப்படும் மற்றொரு குறியீடு உருவாக்கப்பட்டது. அதாவது, வெவ்வேறு மொழிகளைப் பயன்படுத்தும் மக்களால் கணினிகள் பயன்படுத்தப்படலாம்.

கணினியில் படிமங்களினைப் பிரதிநிதித்துவப்படுத்தல்

ஒரு திரையில் வரைவியல்கள் படமூலகங்கள் (pixels) என்று அழைக்கப்படும் சிறிய புள்ளிகளால் உருவாக்கப்படுகின்றன. அதிகமான படமூலகங்கள் கொண்ட திரையில், உயர் பிரிதிறன் மற்றும் படத்தின் தரம் என்பவை சிறப்பாக இருக்கும். உயர் பிரிதிறனுடைய வரைவியலைச் சேமிக்க அதிக நினைவக இடம் தேவைப்படுகிறது.



படம் 1.2.4 உயர பிரிதிறன் மறறும் சிறந்த தரமான படங்கள்

பிட்படங்கள்(**Bitmaps**)

பிட் படங்கள் படமூலகங்கள் என்று அழைக்கப்படும் நிறச் சதுரங்களின் ஒரு ஒழுங்கமைப் பாகும். ஒரு பிட்படம் பெரிதாக்கப்படும் போது, படமூலகங்கள் விரிவாக்கப்பட்டு, பெரிய தொகுதிகளாக்கப்படுகின்றன. அதனால் தான் பிட் படங்கள் மிக அதிக அளவில் பெரிதாக்கப்படுகின்ற போது தரம் குறைந்து காணப்படுகிறது.

பொதுவான பிட்பட படிமக் கோப்புகள் JPEG, GIF மற்றும் PNG வகைகளில் அடங்குகின்றன.

நாம் 1 என்பது கருப்பு (on) மற்றும் 0 என்பது வெள்ளை (off) எனில், துவித முறை மூலம் ஒரு எளிய கருப்பு, வெள்ளைப் படம் உருவாக்கப்படலாம்.

இப்படம் அவ்வாறு உருவாக்கப்பட்டதைக் காட்டும் ஒரு உதாரணமாகும்.



படிமத்தில் வர்ணப்

0	**0**	**0**	**1**	**1**	**0**	**0**	**0**
0	**0**	**1**	**0**	**0**	**1**	**0**	**0**
0	**0**	**1**	**0**	**0**	**1**	**0**	**0**
0	**1**	**0**	**0**	**0**	**0**	**1**	**0**
0	**1**	**1**	**1**	**1**	**1**	**1**	**0**
0	**1**	**0**	**0**	**0**	**0**	**1**	**0**
1	**0**	**0**	**0**	**0**	**0**	**0**	**1**
1	**0**	**0**	**0**	**0**	**0**	**0**	**1**

பிரதிநிதித்துவம்

ஏற்கனவே விபரிக்கப்பட்ட முறைமை கருப்பு வெள்ளைப் படிமத்திற்குச் சிறந்ததாகும். எனினும் அநேகமான படிமங்களுக்கு வர்ணம் பிரயோகிக்க வேண்டியுள்ளது.

- 1 படமூலகத்திற்கு 1 பிட் (0 or 1): சாத்தியமான வர்ணங்கள்2
- 1 படமூலகத்திற்கு 2 பிட் (00 to 11): சாத்தியமான வர்ணங்கள் 4
- 1 படமூலகத்திற்கு 3பிட் (000 to 111): சாத்தியமான வர்ணங்கள் 8
- 1 படமூலகத்திற்கு 3பிட (0000 – 1111): சாத்தியமான வர்ணங்கள் 16
- …
- 1 படமூலகத்திற்கு 16பிட் (0000 0000 0000 0000 – 1111 1111 1111 1111): 65 000 அதிகமான சாத்தியமான வர்ணங்கள்

கணினியில் ஒலியின் பிரதிநிதித்துவம்

கணினிகளால் முறைவழியாக்கம் செய்வதற்கு ஒலி துவிதமாக மாற்றப்பட வேண்டும். இதைச் செய்வதற்கு ஒலி பொதுவாக நுணுக்குப்பன்னி மூலம் கவரப் பட்டு இலக்கமுறைச் சமிக்ஞையாக மாற்றப்படுகிறது.

இது போன்ற ஒலி அலை மாதிரியாக எடுக்கப்பட்டு, ஒவ்வொரு மாதிரிப் புள்ளியினதும் (அந்த நேரத்தில் உள்ள பெறுமதி) பெறுமானம் எடுக்கப்படுகிறது.



படம் 1.2.5 ஒலி அலை

நேரம்	1	2	3	4	5	6	7	8	9	10
பெறுமானம்	8	3	7	6	9	7	2	6	6	6
துவித பெறுமானம்	1000	0011	0111	0110	1001	0111	0010	0100	0110	0110

தேர்ச்சி 2: இயக்க முறைமையைப் பயன்படுத்திக் கணினியினை வினைத்திறனுடனும் விளைத்திறனுடனும் பயன்படுத்துவார்

தேர்ச்சி மட்டம் 2.1: உள் அமைவுகளையும் அமைப்புகளையும் மேற்கொள்வதற்கு இயக்க முறைமையைப் பயன்படுத்துவார்

பாடவேளைகள்: 02

கற்றல் பேறுகள்:

- அமைப்புக்களை மேற் கொள்வார் – திகதி, நேரம், நாணயம் , எண் வடிவங்கள்
- கோப்புப் பண்புகளை மாற்றுவார் – வாசிப்பு மட்டும், மறைக்கப்பட்டது, இருப்பிடம், அளவு
- நீட்சியினைக் கொண்டு கோப்புக்களைத் தேடுவார்

விடய உள்ளடக்கம்:

- பிராந்திய அமைப்புக்கள் – நேரம், திகதி, நாணயம், இலக்க வடிவம்
- கோப்புப் பண்புகள்
- கோப்புத் தேடல்

எண்ணக் கருக்களும் முதன்மைப் பதங்களும்:

- இயக்க முறைமை அமைப்புக்கள்
- கோப்புப் பண்புகளை மாற்றல்
- கோப்பு நீட்சி

பாடத் திட்டமிடலுக்கான வழிகாட்டி:

- கணினியில் பிராந்திய அமைப்புக்களை அணுகுவதற்குத் தேவையான அறிவுறுத்தல்களை வழங்கவும்
- கோப்புப் பண்புகளைப் பற்றிக் கலந்துரையாடவும்
- கோப்பு நீட்சிகளை அடையாளம் காண்பதற்கான அறிவுறுத்தல்களை வழங்கவும்
- மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவிற்கும் பல்வகையான கோப்புக்களை வழங்கி அவற்றை வகைப்படுத்தி முன்வைக்கச் செய்யவும்

கணிப்பீட்டிற்கும் மதிப்பீட்டிற்குமான வழிகாட்டி:

- மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து கணினியில் பிராந்திய அமைப்புகளை மாற்றியமைப்பதற்கும்,பல்வகையான கோப்புகளை வழங்கி அவற்றை வகைப்படுத்திமுன்வைக்கச் செய்வதற்கும் அறிவுறுத்தவும்

தரவிருத்தி உள்ளீடுகள்

- கணினி, இணைய வசதி, பல்வகையான கோப்புக்களின் தொகுப்பு
- https://www.cnet.com/how-to/windows-10-settings-menu-the-time-language-tab/

வாசிப்புப் பத்திரம்

Windows 10 இல் நாடு அல்லது பிராந்தியம் வீடு அமைவிடம் என்பவற்றை மாற்றுவது எவ்வாறு

Settings இல் நாடு அல்லது பிராந்தியம் வீடு அமைவிடம் என்பவற்றை மாற்றுவதற்கு,

1. Settings ஐ திறந்து Time & language எனும் சிறுபடத்தின்(Icon) மீது சொடுக்கவும்
2. இடது பக்கத்திலுள்ள Region& languag மீதுசொடுக்கி, உமது நாட்டை அல்லது பிராந்தியத்தை (உதா:Sri Lanka) வலது பக்கதிலிருந்து தெரிவு செய்யவும் (கீழுள்ள திரை பிடிப்பை நோக்குக)



படம் 2.1.1 அமைப்பின்(settings) சாளரம்



படம் 2.1.1 *Country அல்லது region மற்றும் மொழி அமைப்பு சாளரம்*



படம் 2.1.3 நாட்டினை தெரிவு செய்தல்

Windows 10 இல் திகதி மற்றும் நேரம் என்பவற்றை மாற்றுவது எவ்வாறு

Settings இல் திகதி மற்றும் நேரம் என்பவற்றை மாற்றுவதற்கு,

1. Settings ஐ திறந்து Time & language எனும் சிறுபடத்தின் (Icon) மீது சொடுக்கவும்
2. இடது பக்கத்திலுள்ள Date nad Time மீது சொடுக்கி, உமது உமது நேர வலயத்தைத் (உதா:Sri Jayawardanapura) வலது பக்கதிலிருந்து தெரிவு செய்யவும் ((கீழுள்ள திரை பிடிப்பை நோக்குக)
3. Date nad Time Formats என்பதைச் சொடுக்கவும்
4. திகதி மற்றும் நேரம் என்பவற்றை மாற்றவும்
5. அமைப்பு மாற்றங்களின் பின் Settings ஐ மூடவும்





படம் 2.1.4 நேர வலயத்தினைத் தெரிவு செய்தல்

படம் 2.1.5 திகதி நேரம் என்பனவற்றின் வடிவத்தினைத் தெரிவு செய்தல்

Windows 10 இல் நாணயக் குறியை எவ்வாறு மாற்றுவது

Settings இல் நாணயக் குறியை மாற்றுவதற்கு,

1. Settings ஐ திறந்து Time & language எனும் சிறுபடத்தின் (Icon) மீது சொடுக்கவும்
2. Regoin உரையாடல் பெட்டியில் Additional settings என்பதைச் சொடுக்கவும்
3. Currency tab, மற்றும் நாணயக் குறியீட்டினைத் (உ-ம்: ரூ) தெரிவு செய்க. Apply மற்றும் OK பொத்தான்களைச் சொடுக்கவும்
4. நீங்கள் விரும்பினால் இப்பொழுது Settings ஐ மூடவும்

1



படம் 2.1.6 அமைப்பின் சாளரம்

2



படம் 2.1.7 திகதி மற்றும் நேரத்தினைத் தெரிவு செய்யும் சாளரம்

3



படம் 2.1.8 நாணயத்தினைத் தெரிவு செய்யும் சாளரம்

Windows 10 இல் இலக்க வடிவமைப்பை எவ்வாறு மாற்றுவது

Settings இல் இலக்க வடிவமைப்பை மாற்றுவதற்கு,

1. Settings ஐ திறந்து Change date, time அல்லது number எனும் சிறுபடத்தின் (Icon) மீது சொடுக்கவும்
2. Regoin உரையாடல் பெட்டியில் கீழ் பகுதியிலுள்ள Additional Settings என்பதைச் சொடுக்கவும்
3. Number தாவலைத் (Tab) தெரிவு செய்து தசமக்குறியீடு (உ-ம்: “.”) தட்டெழுத்திடவும். ஏனைய தாவல்களுக்கும் தேவையான மாற்றங்களைச் செய்து Apply பொத்தானை மற்றும் OK பொத்தானைச் சொடுக்கவும்.
4. நீங்கள் விரும்பினால் அமைப்பு மாற்றங்களின் பின் Settings ஐ மூடவும்



படம் 2.1.9 எண் வடிவமைப்புச் சாளரம்

கோப்புப் பண்புகளை அமைத்தல்

ஒரு கோப்பினை மறைத்தல்

1. File Explore என்பதைத் திறக்கவும்
2. மறைத்து வைக்கத் தேவையான கோப்பை அல்லது கோப்புறையைத் தெரிவு செய்யவும்
3. உருப்படியை வலது சொடுக்கி மற்றும் Properties மீது சொடுக்குக.
4. General எனும் தாவலின் (Tab)Attributes என்பதற்குக் கீழாக உள்ள Hidden எனும் தெரிவைச் சரிபார்க்கவும்.



படம் 2.1.10 கோப்பு விபரம் வெளிப்படுத்துகை (explorer) சாளரம்

5. Apply ஐச் சொடுக்கவும்



படம் 2.1.11 இரகசிய கோப்புப் பண்புகள் சாளரம்

6. ஒரு கோப்புறை அதன் கோப்புகள் மற்றும் உப கோப்புறைகளுடன் மறைக்கும் போது “Apply changes to this folder, subfolders, and files” எனும் தெரிவினைத் தெரிவு செய்வதை உறுதி செய்யவும்
7. OK பொத்தானைச் சொடுக்கவும்



படம் 2.1.11 பண்புகள் மாற்றத்தினை உறுதிப்படுத்தும் சாளரம்

8. மீண்டும் OK பொத்தானைச் சொடுக்கிச் செயலைப் பூர்த்தி செய்யவும்

மறைக்கப்பட்ட கோப்புகள் மற்றும் கோப்புறைகள் என்பவற்றை மீண்டும் காட்டச் செய்தல்

File Explore என்பதைத் திறந்து View தாவலில் சொடுக்கிய பின் Hidden எனும் சரிபார்த்தல் பெட்டியில் சரியிட வேண்டும். அதன் பின் மறைக்கப்பட்டவைகளும் வழமை போல் காணக்கூடியதாக இருக்கும்.

மறைக்கப்பட்ட கோப்பின் அல்லது கோப்புறையின் முழுமையான இருப்பிட வழியைத் தட்டச்சு செய்து Enter செய்வதன் மூலமும் அவற்றைப் பெற்றுக் கொள்ளலாம். உ_தா:C:\Users\admin\Desktop\Files\Secret Files\My School.ppt



படம் 2.1.12 மறைக்கப்பட்ட கோப்புக்களையும் கோப்புறைகளையும் மீண்டும் புலனாகச் செய்தல்

கோப்புத் தேடல்

கோப்பு நீட்சி, திகதி மற்றும் அளவு என்பவற்றின் மூலம் விண்டோஸில் தேடல்

1. File Explore என்பதைத் திறந்து தேடல் பெட்டியில் (Search box) சொடுக்கவும்
2. சாளரத்தின் மேற்பகுதியில் Search Tools தோன்றும். இக்கருவிகள் கோப்பு வகை,திகதி, அளவு மற்றும் மாற்றங்களைமேற்கொண்ட திகதி என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு தேடலை மேற்கொள்வதற்கு வசதியளிக்கின்றன.
3. மாற்றாக, திரையின் மேல் வலது புறத்தில் உள்ள தேடல் பெட்டியில் தேடல் நிபந்தனைகளைத் தட்டச்சுச் செய்து Enter சாவியை அழுத்தவும்.

தேடல் உதாரணங்கள்

1. கோப்புப் பெயர் – Ex : ICT Grade 8
2. அளவு Size - Ex : 25MB
3. வகை Type - Ex : .pfd
4. உருவாக்கப்பட்ட திகதி– 2017/10/23
5. மாற்றங்களை மேற்கொண்ட திகதி – 2017/11/22

6. ஆக்கியோன் /ஆசிரியர் - CHAMARI
7. இருப்பிடம்: கொழும்பு



படம் 2.1.13 கோப்பு விபரம் வெளிப்படுத்துகை (explorer) சாளரம்



படம் 2.1.14 விபரங்களை தெரிவு செய்தல்

தேர்ச்சி 2: இயக்க முறைமையைப் பயன்படுத்திக் கணினியினை வினைத்திறனுடனும் விளைத்திறனுடனும் பயன்படுத்துவார்

தேர்ச்சி மட்டம் 2.2: கணினிகளின் அடிப்படைப் பிரச்சினைகளைச் சரிசெய்தல் மற்றும் பராமரிப்பு என்பவற்றை மேற்கொள்வார் (வன்பொருள் மற்றும் மென்பொருள்)

பாடவேளைகள்: 02

கற்றல் பேறுகள்:

- சில வன்பொருள் தொடர்பான பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பார்
- மென்பொருள் தொடர்பான பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பார்

விடய உள்ளடக்கம்:

- கணினிகளின் சிறிய பிழைகளைத் திருத்துதல்
- வன்பொருள் சிக்கல்கள் (விசைப்பலகை, சுட்டி, மின்வடம், வலையமைப்பு, VGA வடம்)
- ஒலி வெளியீட்டுச் சிக்கல்கள்(ஒலிபெருக்கி இணைப்பு, ஒலி அளவினை(Volume) சரி செய்தல்)
- துறைகளின் இணைப்பு((PS/2, USB, Micro USB GA, HDMI, Parallel, RJ45,SD Card reader)
- கணினி மென்பொருள் பிழையறிந்து (issues) தீர்வு காணல்
- சீர்குலைந்த மென்பொருள் (Corrupt software)
- வெறும் திரை (Blank desktop)

எண்ணக் கருக்களும் முதன்மைப் பதங்களும்:

- பிழை கண்டறிதல்
- கணினித் தவறுகள்
- வன்பொருள் பிரச்சினைகள்
- துறை இணைப்பு
- மென்பொருள் சிதைவு
- வெற்றுத் திரை

பாடத் திட்டமிடலுக்கான வழிகாட்டி:

- தவறு கண்டறிதலை விளக்கவும்
- கணினியின் வன்பொருள் மென்பொருள் பிரச்சினைகளை அடையாளம் காண்பதற்கான அறிவுறுத்தல்களை வழங்கவும்
- கணினியின் வன்பொருள் மென்பொருள் பிரச்சினைகளை அடையாளம் கண்டு தீர்வளிப்பதற்கான வழிகாட்டுதல்கள்.
- மாணவர்களைக் குழுக்களாக வகுத்து வெவ்வேறு விதமான வன்பொருள் மென்பொருள் பிரச்சினைகளை வழங்கி தாம் பெற்றுக் கொண்ட அறிவின்படி அவற்றிற்குத் தீர்வு காணச் செய்யவும்

கணிப்பீட்டிற்கும் மதிப்பீட்டிற்குமான வழிகாட்டி:

- எழுமாறாக ஒவ்வொரு கணினியினதும் மின்வடங்களை அகற்றி வன்பொருள் கூறுகளை வேறாக்கவும்.
- மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து கணினியின் வெவ்வேறு விதமான வன்பொருள் மென்பொருள் பிரச்சினைகளைக் கண்டறிந்து தீர்வு காணச் செய்யவும்

தரவிருத்தி உள்ளீடுகள்

- வன்பொருள், இணைய வசதி, பொருத்தமான மென்பொருள்
- https://www.computerhope.com/jargon/t/troushoo.htm

வாசிப்புப் பத்திரம்

பிழை கண்டறிதல்

கணினிப் பிரச்சினையை எப்படித் தீர்க்க வேண்டும் என்பதைக் கண்டறிவதே இச் செயல் முறையின் நோக்கமாகும்.

கணினி பிழை கண்டறிதல் கண்ணோட்டம்

கீழுள்ள படிமுறைகளைப் பின்பற்றுவதன் மூலம் பெரும்பாலான கணினிப் பிரச்சினைகளை கண்டறிய அல்லது தீர்க்க முடியும்.

1. கணினி இயங்கு நிலையை அடைகிறதா?
2. பிழை செய்திகள் கிடைக்கின்றனவா?
3. கணினியை மீண்டும் துவக்கவும்
4. புதிய வன்பொருள் அல்லது மென்பொருள் சேர்க்கப்பட்டு இருக்கின்றனவா?
5. கணினி இடம் பெயர்க்கப்பட்டதா?
6. மின் ஒழுக்குகள் அல்லது அதிக மின்னழுத்தம் ஏற்பட்டதா?
7. மீண்டும் மின் வடங்களை இணைத்துச் சரிபார்க்கவும்
8. மேம்படுத்தல் இயக்கிகள் அல்லது சமீபத்திய இணைப்புகளை நிறுவவும்
9. தீம்பொருள் மற்றும் நச்சுநிரல் வருடலை மேற்கொள்ளவும்
10. கணினி இறுதியாக எப்போது சிக்கல் இல்லாமல் இயங்கிக் கொண்டிருந்தது?
11. ஏனைய கணினி வன்பொருள் மற்றும் மென்பொருளைச் சரிசெய்தல்

வன்பொருள் சிக்கல்கள்

- விசைப்பலகை
- சுட்டி
- மின் வடங்கள்
- வலையமைப்பு வடங்கள்
- VGA வடங்கள்

ஒலி வெளியீட்டுப் பிரச்சினைகள்

- ஒலிபெருக்கி இணைப்பு
- ஒலி அளவினைச் (volume) சோதிக்கவும் பார்க்கவும்

துறை இணைப்புகள்

- PS/2
- USB
- Micro USB
- VGA
- HDMI
- Parallel
- RJ45
- நினைவக அட்டை வாசிப்பான்

படம் 2.2.1 சக்தி வட இணைப்பு

தொடர்புடைய கணினி வன்பொருள் சிக்கல்களைத் தீர்த்தல்

i. சாதனம் கணினியுடன் இணைக்கப்பட்டிருப்பதை உறுதிப்படுத்தவும். இல்லையெனில், அதைக் கணினிக்கு இணைக்கவும்
ii. வடமிலாச் சாதனத்தைப் பயன்படுத்துகையில், மின்கலத்தை மாற்ற முயற்சிக்கவும்
iii. எல்லா வடங்களும் சரியாக இணைக்கப்பட்டிருப்பதை உறுதி செய்யவும்
iv. சாதனத்தை மீண்டும் மீண்டும் அணைத்து இயக்கவும்
v. கணினியை மீள்துவக்கம் செய்யவும்
vi. ஒலி அளவினைச் (volume) சரிபார்க்கவும்

கணினி மென்பொருள் பிரச்சினைகள்

i இறப்பின் நீலத் திரை (Blue Screen of Death - BSoD)
ii DLL கோப்புகள் காணப்படாமை
iii நிறுவ முடியாத மென்பொருள்கள்
iv மென்பொருள்கள் மெதுவாக இயங்கல்
v மென்பொருள்களின் அசாதாரண நடத்தை
vi மென்பொருள் நிரலை நிறுவ முடியாமை
vii நிறுவலின் போது பிழை காணப்படுதல்

தொடர்புடைய கணினி மென்பொருள் சிக்கல்களைக் கண்டறிதல் மற்றும் சரிசெய்தல்

i மென்பொருள் தொகுதிக் கட்டுப்பாட்டு அமைப்புகளைச் சரிபார்க்கவும்
ii இயக்கிகளைப் புதுப்பிக்கவும் அல்லது சமீபத்திய இணைப்புகளை நிறுவவும்
iii தீம்பொருள் மற்றும் நச்சுநிரல் வருடல்

சீரழிந்த மென்பொருள் (Corrupt software)

மென்பொருள் சரியாக நிறுவப்படாத அல்லது தீம்பொருள் நிரல் காரணமாக அவை மோசமானவையாகக் காணப்படல். ஒரு மென்பொருள் மோசமாகும் போது, அது பிழைகள் இல்லாமல் திறக்க முடியாது. சில சந்தர்ப்பங்களில், காப்பெடுக்கப்பட்டதன் மூலம் கோப்பைப் பதிலீடு செய்யாமல் மீட்டெடுக்க முடியாது.

வெற்றுத் திரை

கணினி இயங்குகிறது ஆனால் திரை வெற்றாக இருந்தால், கணினிக்கும் திரைக்கும் இடையேயான தொடர்பில் சிக்கல் இருக்கலாம். முதலாவதாக, காட்சிதிரை மின் செருகியில் செருகப்பட்டு, காட்சிதிரை மற்றும் கணினி வனவட்டு என்பவற்றிற்கு இடையேயான இணைப்புச் சரியாக இருக்கிறதா என்று பார்க்கவும். பிரச்சினை ஒரு மடிக்கணினி என்றால், அதன் அக இணைப்பு வடங்கள் சில விலகி இருக்கலாம். இதனை இதனுடன் தொடர்புடைய தொழில்சார் ஒருவரை அணுகி அதைச் சரி செய்ய வேண்டும்.

தேர்ச்சி : 3 நாளாந்தச் செயற்பாடுகளில் சொல்முறைவழிப்படுத்தல் மென்பொருளினைப் பயன்படுத்துவார்.

தேர்ச்சிமட்டம் : 3.1 ஆவணமொன்றினை உருவாக்குவதில் சொல்முறைவழிப்படுத்தல் மென்பொருளின் அடிப்படைச் செயற்பாடுகளைப் பின்பற்றுவார்.

பாடவேளைகள்: 06

கற்றல் பேறுகள்:

- சொல் முறைவழிப்படுத்தல் மென்பொருளினைப் பயன்படுத்தி வடிவமைக்கப்பட்ட ஆவணமொன்றினை உருவாக்குவார்.
    - பொருத்தமான வாசக வடிவமைப்பைப் பிரயோகிப்பார்.
    - வரைவியலைக் கையாள்வார் மற்றும் எளிய வடிவங்களை வரைவார்.
    - தரவினை உள்ளிடுவதற்கு அட்டவணைகளை உருவாக்குவார்.
    - அட்டவணைகளை வடிவமைப்பார்.
    - அட்டவணைகளைத் தொகுப்பார்
    - ஆவணத்தின் எழுத்து மற்றும் இலக்கணத்தைச் சரிபார்ப்பார்.

விடய உள்ளடக்கம்:

- ஆவணமொன்றினை உருவாக்குதல், திறத்தல், சேமித்தல் மற்றும் மூடுதல்.
- வாசகத்தின் வடிவமைப்பு
- கோப்புக்கள் மற்றும் பொருள் என்பனவற்றினை உள்ளீடு செய்தல் (வாசகம், படம், வடிவங்கள், ஆயத்தப்படம்(clip art,), சொல் வரைவியல் (word art)போன்றவை)
- அட்டவணையினை உள்ளீடு செய்தல்
- எழுத்துப் பிழைகளையும் இலக்கணப் பிழைகளையும் பரிசோதித்தல்
- பட்டியல்கள்
- வாசகத்தின் வடிவமைப்பு
- வரைவியல்கள்: உள்ளிடல் மற்றும் வடிவமைத்தல்.
- வடிவங்கள் : உள்ளிடல் மற்றும் வடிவமைத்தல்.
- அட்டவணைகளின் உள்ளிடல்.
- நிரல் அகலம் மற்றும் உயரம்.
- கலங்களின் அழித்தல், உள்ளிடல், பிளத்தல் மற்றும் ஒன்றிணைப்பு
- எழுத்துக் கூட்டல் மற்றும் இலக்கணம் சரிபார்த்தல்

எண்ணக்கருக்களும் முதன்மைப் பதங்களும் :

- பெறக் கூடிய வசதிகளின் உருவரை(Outline): உருவாக்கல், தொகுத்தல், சேமித்தல், பகிரல், வரைவியலின் பயன், பிரதிகள்
- பயனர் இடைமுகத்தின் பழக்கம்
- பட்டியல் தொடர்களிற்கான குறுக்கு வழிகள்: திறப்பதற்கு, மூடுதல், சேமித்தல், பிரதி, வெட்டுதல், ஒட்டுதல், செயல் தவிர்(undo), மீளச்செய்(redo)
- வடிவமைத்தலின் வெவ்வேறு வகைகள்: வாசகம் (எழுத்துரு, தடிப்பாக்கம் (bold face), சாய்வான எழுத்துரு (italics)…), பந்தி (மத்தி, வலது மற்றும் இடது ஓரவெட்டு, நேராக்கம் (justification), குண்டுக்குறி மற்றும் இலக்கங்கள்), பக்கம் (ஓரங்கள் (margins), திசைமுகப்பாடு (orientation))

- நிரல் அகலத்தின் சீரமைப்பு (Adjustment): துல்லியமாகப் பொருந்துதல் (exact fit)
- அடுத்தடுத்த பக்கங்களிற்குப் பிரதான தலைப்பின் தொடர்ச்சி
- இறுதிப் பதிப்பித்தலாக (editing) கலங்களின் இணைப்புக் காணப்படுதல்
- உள்ளமைந்துள்ள எழுத்துச் சரிபார்ப்பியி மற்றும் இலக்கணச் சரிபார்ப்பியின் வரையறைகள்

பாடத் திட்டமிடலுக்கான வழிகாட்டி:

- மென்பொருளின் அடிப்படைச் செயற்பாடுகளுக்கான அவற்றின் பயன்பாடு பற்றிய கலந்துரையாடவும்.
- அடிப்படைச் செயற்பாடுகளின் செயல்முறை விளக்கம் பற்றிக் கலந்துரையாடவும்.
- வெவ்வேறு வழிகளில் ஒருசொல் முறைவழியாக்கி ஆவணத்தினைத் திறத்தல்: மென்பொருளினூடாக ஆவணத்தை இரட்டைச் சொடுக்கு செய்வதன் மூலம் வலது சொடுக்கினூடாகத் திறக்கவும்.
- வடிவமைத்தல் கருவிகள் பற்றிய ஆசிரியரின் செய்முறையை விளக்கவும்
- வடிவமைத்தல் நுட்பங்களைப் பூர்த்தி செய்வதற்குஉருவாக்கப்பட்ட செயற்பாட்டுத் தாளினை வழங்கவும்.
- சூழமைவில் கற்பதற்கு ஏற்ற வகையில் அவர்களுக்குக் கருத்துள்ள பயிற்சிகளை வழங்கவும்.
- அட்டவணைகளிற்கான கருவிகள் பற்றிய ஆசிரியரின் செயல்முறையை விளக்கவும்.
- அட்டவணைகளுடன் வேலை செய்வதனைப் பூர்த்தி செய்வதற்கு உருவாக்கப்பட்ட செயற்பாட்டுத் தாளினை வழங்கவும்.
- தட்டெழுத்திடுவதற்கு என எழுத்துரு பிழைகளுடன் ஆவணங்களை வழங்குக.
- எழுத்துச் சரிபார்ப்பியினைப் பிழைகளைத் திருத்துவதற்குப் பிரயோகிக்கவும்.

கணிப்பீட்டிற்கும் மதிப்பீட்டிற்குமான வழிகாட்டி :

- வன்தட்டின் மீது சேமிக்கப்பட்ட ஆவணத்தினைத் திறத்தல்.
- ஆவணத்தினைப் பதிப்பித்தல்.
- தரப்பட்ட வடிவங்களில் சேமித்தல்.
- குறிப்பிட்ட வடிவமைப்பினை முன்னெடுப்பதற்கு வடிவமைக்கப்படாத வாசகத்தின் மென் படிவத்தினை வழங்குக.
- ஏற்கனவே பூர்த்தி செய்யப்பட்ட ஆவணங்களை மென்பொருளினைப் பயன்படுத்தி மீண்டும் அவற்றை உருவாக்குவதற்காக வழங்குக.
- ஒன்றாக்கப்பட்ட கலங்கள் போன்ற வடிவமைக்கப்பட்ட அட்டவணைப் படுத்தப்பட்ட தரவின் வன் நகல் ஒன்றினை வழங்குக.
- திருத்தப்படுவதற்காக எழுத்துருப் பிழைகளுடன் ஆவணத்தின் மென் பிரதிகளை வழங்குக.

தரவிருத்தி உள்ளீடுகள்:

- சொல் முறைவழியாக்கி மென்பொருளுடன் கூடிய கணினிகள்
- https://www.tutorialspoint.com/word/word_explore_window.htm

வாசிப்புப் பத்திரம்

சொல் முறைவழியாக்கி மென்பொருள்

பல பிரபலமான சொல் முறைவழியாக்கி மென்பொருள்கள் கிடைக்கின்றன. சிலவற்றை வாங்கவேண்டும் (உரிமம் பெற்றது) மற்றும் சில இலவசம் மற்றும் திறந்த மூல மென்பொருளாகும்(FOSS).

உதாரணம்:

FOSS

- Software -Libre Office Writer
  Producer- The document foundation
- software - Open Office Writer
  producer - Apache Software foundation

License

- Software - Microsoft Office Word producer - Microsoft
- Software - iWork Pages
  producer - Apple

சொல் முறைவழியாக்கி மென்பொருளைப் பழகிக் கொள்ளுங்கள்



படம் 3.1.1 முகப்புத் தாவல் இடைமுகம்

1. **தலைப்புப்பட்டை(Title Bar)** – Microsoft Office word 2010 window ன் ஆகவும் மேலேயுள்ள பட்டை தலைப்புப் பட்டையாகும். திறக்கப்பட்ட ஆவணத்தின் பெயர் இங்கே தோன்றும்

2. **நாடா (Ribbon)** - உருப்படிகள் சிறு படங்களாகக் காட்டப்பட்டிருப்பது நாடவின் விசேட பண்பாகும். நாடாவின் பண்புக் கூறுகள் (கோப்பு, தொடக்க நிலை (Home), உள்ளிடல் போன்றவை) தாவல்கள்(Tabs) எனப்படும்.

தொடக்க நிலைத் தாவலின் (Home tab)சில பண்புக் கூறுகள் கீழே காட்டப்பட்டுள்ளது.



உரு 6.4 Home Ribbon

1. தடிப்பு - Bold
2. சாய்வு - Italic
3. அடிக்கோடு - Underline
4. கீழ்ஒட்டு - Subscript
5. மேல்ஒட்டு - Superscript
6. எழுத்து நிறம் - Font colour
7. நேர்படுத்தல்கள் - Alignments
8. வரி இடைவெளி - Line spacing
9. நிழற்படுத்தல் - Shading
10. விளிம்பு - Border
11. வரிசையாக்கு - Sort
12. உள்தள்ளுதல் - Indentation
13. எண்ணுதல் - Numbering
14. குண்டுகுறிகள் - Bullets
15. ஆங்கில எழுத்துகளை பேரெழுத்துக்களாகவும் சிற்றெழுத்துக்களாகவும் மாற்றுதல் - Change case
16. எழுத்தின் அளவினைப் பெருப்பித்தல் - Grow Font
17. எழுத்தின் அளவு - Font Size
18. எழுத்தின் பெயர் வகை - Font Name

படம் 3.1.2 முகப்புத் தாவலின் சில இயல்புகள்

3. **விரைவு அணுகல் கருவிப்பட்டை (Quick Access Tool Bar)** – விரைவு அணுகல் கருவிப் பட்டை புதிய ஆவணத்தைத் திறத்தல், ஆவணத்தைச் சேமித்தல் அல்லது திறத்தல், பெரிதாக்கம், செயல் தவிர்(Undo), மீளச் செய்(Redo) போன்ற விரைவுக் கட்டளைகளைக் கொண்டிருக்கின்றது.



படம் 3.1.3 விரைவு அணுகல் கருவிப் பட்டை

4. **உரையாடல் பெட்டி தொடங்கி (Dialogue Box launcher)** - உரையாடல் பெட்டி தொடங்கி மேலதிக கருவிகளைக் காட்டுகின்றது. குழுப் பெயரின் வலது கைப்பக்கத்தில் அம்புக்குறியைச் சொடுக்குச் செய்வதன் மூலம் உரையாடல் பெட்டி திறக்கப்பட முடியும். ஆவணத்தைத் தயாரிப்பதற்கு நாடாவிலும் தோன்றும் கருவிகளை விடவும் வேறு பல பயனுள்ள கருவிகளை உரையாடல் பெட்டி வழங்கும்.

5. **இருப்பு நிலைப்பட்டை (Status Bar)** - Microsoft Word window வின் இடது அடிப்பகுதியில் காணப்படும். இது பக்கங்களின் எண்ணிக்கை மற்றும் ஆவணத்தில் உள்ள சொற்களின் எண்ணிக்கை, பயன்படுத்தப்பட்ட மொழி, view பொத்தான் போன்றவற்றைக் கொண்டிருக்கும்.
6. **உருட்டும் பட்டை (Scroll Bar)** – ஆவணத்தின் மேல் மற்றும் கீழ் செல்வதற்குப் பயன்படுத்தப்படும்.
7. **பெரிதாக்கம் (Zoom)** - படங்களின் அளவினைத் திரையின் மீது பெரிதாக்கத்தினால் சரி செய்ய முடியும். இது மூல ஆவணத்தைப் பாதிக்காது.

8. **நோக்கல் பொத்தான்கள் (View Buttons)**

   a. **வாசித்தல் (Reading)** – மைக்ரோ சொப்ட் வேர்டில் "Reading view" ஆனது உங்களுக்கு எந்த ஒரு கருவிப்பட்டைகளும் இல்லாது ஒரு ஆவணத்தை முழுத் திரையிலும் பார்ப்பதற்கு(பதிப்பித்தல் செய்ய முடியாது) அனுமதிக்கின்றது. முழுத் திரையிலும் வாசிப்பதை நிறுத்துவதற்கு விடுபடு சாவியை (escape key) அழுத்தவும்.
   a. **இயல்புக் காட்சி (Normal view)** – செய்நிரலின் இயல்பு நிலை பார்வை (default view) இயல்புக் காட்சியாகும்.
   b. **வலை தளவமைப்பு (Web Layout)** - மைக்ரோ சொப்ட் வேர்டில் வலை தளவமைப்பு முழுத் திரையில் எல்லாக் கருவிகளுடனும் பதிப்பிக்கக்கூடிய வகையில் காட்சிப்படுத்துகின்றது.
   c. **உருவரைவுக் காட்சி (Outline view)** – தலைப்புக்கள் மற்றும் மறைக்கப்பட்ட பந்திகள் என்பவை "+" குறியுடன் குறிப்பிடப்பட்டுள்ளமையால் சாராம்ச பார்வையின் மூலம் சிக்கலான ஆவணங்களை இலகுவாகப் பார்வையிடலாம்.

ஆவணம் ஒன்றை உருவாக்கல்

சொல் முறைவழிப்படுத்தல் மென்பொருளைத் திறக்கும் போது புதிய பக்கம் இருந்தாலும் கூட இன்னொரு ஆவணத்திற்காகப் பயனர் புதிய பக்கத்தைப் பெறுதல் வேண்டும்.

File → New → Blank Document

(Ctrl + N) → Blank Document

ஒரு ஆவணத்தைத் திறத்தல்

பயனர் கணினியில் சேமிக்கப்பட்டிருக்கும் அல்லது புற சேமிப்பு ஊடகத்தில் உள்ள ஆவணத்தைத் திறக்க வேண்டியிருப்பின் அவ் ஆவணத்தைத் திறப்பதற்கு

- தெரிக 'File → Open' அல்லது விசைப்பலகையில் இருந்து (Ctrl+O) அழுத்துக.
- திறக்கப்பட்ட உரையாடல் பெட்டியில் சேமிக்கப்பட்ட கோப்பினை 'Look in' இடத்தில் தெரிக.
- சாளரத்தில் இருந்து ஆவணத்தைத் தெரிக.
- 'Open' பொத்தானைச் சொடக்குச் செய்க.

ஒரு ஆவணத்தை மூடுதல்

ஆவணம் தேவைப்படாத போது ஆவணத்தை மூடுதல் நல்லது. திறக்கப்பட்ட ஆவணங்கள் கணினி செயல்திறனுக்கு இடையூறாகக் காணப்படும்.

- தெரிக 'File → Close'
- (Ctrl + W)
- தலைப்புப் பட்டையின் வலது உச்சி மூலையில் தோன்றும் சிறிய குறுக்கு வெட்டு(cross) அடையாளத்தைத் தெரிக.

ஒரு ஆவணத்தைச் சேமித்தல்
ஆவணத்தைச் சரியான இடத்தில் சரியான பெயரில் சேமித்தல் அவசியமானது. இது பயனருக்குச் சேமிக்கப்பட்ட ஆவணத்தை இலகுவாகக் கண்டுபிடிப்பதற்கு உதவி செய்கிறது.

- தெரிக, File → Save அல்லது விசைப்பலகையில் இருந்து (Ctrl + S) ஐ அழுத்துக.
- 'Save in' ஐப் பயன்படுத்தி ஒரு சேமிக்கும் இடத்தைத் தெரிக.
- ஆவணத்தின் சரியான பெயரை 'File name' இல் தட்டெழுத்திடவும்.
- save' பொத்தானைச் சொடக்கவும்.

வேறு பெயரின் மூலம் கோப்பினைச் சேமித்தல்.
பயனர் ஒரு பெயரைக் கொடுப்பதன் மூலம் ஆவணத்தைச் சேமிப்பாராயின் அது கோப்பு எனப்படும். பயனர் கோப்பினை இன்னொரு இடத்தில் இன்னொரு பெயர் மூலம் சேமிக்க முடியும். பயனர் பின்னர் ஏற்கனவே இருக்கக் கூடிய பெயரிலும் மற்றும் புதிய பெயரிலுமாக இரு கோப்புக்களைப் பெறுவார்.

- File இனைத் தெரிக → Save as அல்லது விசைப்பலகையில் இருந்து Ctrl + S அழுத்துக
- 'Save in' இலிருந்து சேமிக்கும் இடத்தைத் தெரிக.
- ஆவணத்தின் சரியான பெயரை 'File name' இல் தட்டெழுத்திடவும்.
- 'save' பொத்தானைச் சொடக்கவும்.

வாசக பதிப்பித்தல்
பயனர் பின்வருவனவற்றைச் செய்ய முடியும்.

- எழுத்துரு (Font Size) அளவினை மாற்றல்.
  வாசகத்தைத் தெரிக (Select the text) → முகப்புத் தாவலிற்குச் செல்க (go to Home tab) → எழுத்துரு குழு (Font group) → "font size" கீழ் விழும் பட்டியலில் இருந்து விருப்பமான எழுத்துரு அளவினைத் தெரிவு செய்க.

- எழுத்துரு(Font Style) பாணியை மாற்றல் - எழுத்துக்களைத் தடிப்பாக(Bold) அல்லது சாய்வாக(Italic) உருவாக்கல்.
  வாசகத்தைத் தெரிக → முகப்புத் தாவலிற்குச் செல்க (go to Home tab) → எழுத்துரு குழு (Font group) → "font" கீழ் விழும் பட்டியலில் இருந்து விருப்பமான எழுத்துரு வடிவினைத் தெரிவு செய்க.

- எழுத்துக் கீழ்க்கோடிடல் (Underline letters).
  வாசகத்தைத் தெரிக → முகப்புத் தாவலிற்குச் செல்க(go to Home tab) → எழுத்துரு குழு (Font group) → "U" வினைத் தெரிக அல்லது வாசகத்தைத் தெரிக.→ (ctrl + U)

- வெவ்வேறான மொழிகளில் இருந்து வெவ்வேறான வகை எழுத்துருக்களைப் பயன்படுத்துக.
  வாசகத்தைத் தெரிக → முகப்புத் தாவலிற்குச் செல்க (go to Home tab) → எழுத்துரு குழு (Font group) → "font" கீழ் விழும் பட்டியலில் இருந்து விருப்பமான மொழியின் எழுத்துரு வடிவினைத் தெரிவு செய்க.

- எழுத்துரு நிறத்தினை மாற்றல்.
  வாசகத்தைத் தெரிக → முகப்புத் தாவலிற்குச் செல்க (go to Home tab) → எழுத்துரு குழு (Font group)→ "Font color" சிறுபடத்திற்கு அடுத்ததாக இருக்கும் கீழ் விழும் பட்டியலில் இருந்து விருப்பமான நிறத்தினைத் தெரிவு செய்க.

பந்தி வடிவமைத்தல் (Paragraph formatting)

வாசக சீரமைப்பு (Text alignment)

i	இடது சீரமைப்பு (Left Align)	வாசகத்தைத் தெரிக→ முகப்பு
ii	மத்திய சீரமைப்பு (Center Align)	தாவலைத் சொடுக்குக→
iii	வலது சீரமைப்பு (Right Align)	விருப்பமான சீரமைப்பு
iv	இருபுற சீரமைப்பு (Justify)	கோடு மற்றும் பந்தி இடைவெளிகள்
	-	தெரிவு செய்க

வடிவங்களை உள்ளிடல் (Inserting Shapes)

இது உங்கள் ஆவணத்தில் பெட்டிகள், வட்டங்கள் மற்றும் அம்புக்குறிகள் போன்ற பல்வேறுபட்ட வடிவங்களைச் சேர்ப்பதற்கு அனுமதிக்கின்றது.

வடிவங்களை உள்ளீடு செய்வதற்கு :

எங்கு நீங்கள் வடிவத்தை உள்ளிட வேண்டுமோ அவ்விடத்தில் சொடக்கவும்.

- உள்ளிடல் தாவலைத் தெரிக → Illustration குழு → Shapes தெரிவு → கூடத்தில் (gallery) இருந்து விருப்பமான வடிவத்தைத் தெரிக.
- நிலைக்காட்டி (cursor) + குறிக்கு மாறுகிறது. வடிவத்தை வரைவதற்குச் சொடக்கு செய்து சுட்டியினால் பிடித்து இழுக்கவும்.
- நீங்கள் வடிவத்தினுள் வாசகத்தை உள்ளிடவும் முடியும். அதற்கு "Add text" தெரிவினைச் சூழமைவுப் பட்டியலில் இருந்து தெரிவு செய்வதன் மூலம் உள்ளிடலாம்.
- இந்த வாசகத்தை வடிவமைப்பதற்குப் பயன்படுத்தக்கூடியவை
  - HOME தாவலில் உள்ள font குழுவில் உள்ள தெரிவுகள்
  - FORMAT தாவலில் உள்ள DRAWING TOOLS இல் உள்ள தெரிவுகள்
- நீங்கள் சில வடிவங்களைத் தெரிவு செய்யும் போது மஞ்சள் கையாளிகளை நீங்கள் பெறலாம். இதனை வடிவங்களை மாற்றுவதற்குப் பயன்படுத்தலாம்.





- ஒன்றுக்கு மேற்பட்ட வடிவங்கள் உள்ளிடப்பட்டுள்ள போது எந்த வடிவம் உச்சியில் தோன்ற வேண்டும் என்பதைக் கட்டுப்படுத்துவதற்குச் சொல் முறைவழியாக்கம் அனுமதிக்கின்றது.
    - நீங்கள் நகர்த்த வேண்டிய வடிவத்தின் மீது வலது சொடுக்கிடவும்.
    - சூழமைவுப் பட்டியலில் (context menu) அல்லது அவற்றின் உபபட்டியல்களில் இருந்து "bring to front" அல்லது "Send to back" என்பது போன்ற விருப்பமான தெரிவுகளைத் தெரிக / வடிவத்தைத் தெரிக மற்றும் FORMAT தாவலில் arrange குழவில் "bring forward அல்லது "Send backward" கட்டளைத் தெரிவுகளைப் பயன்படுத்துக.

படங்களை உள்ளிடுதல்.

- நீங்கள் படத்தை உள்ளிட வேண்டிய இடத்தில் நிலைக்காட்டியை வைக்கவும்.
- insert தாவலைச் சொடக்குச் செய்க மற்றம் Illustrations குழுவில் படங்கள் பொத்தானைச் சொடக்குச் செய்க.
- பின்னர் படத்தினை உள்ளிடுவதற்கான உரையாடல் பெட்டி திறக்கப்படுகின்றது.
- இதில் உங்களுக்குத் தேவைப்படும் படிமத்தைக் (image) கொண்டிருக்கின்ற கோப்பைத் தெரிவு செய்யவும்.
- விருப்பமான படிமத்தைத் தெரிவு செய்து உள்ளிடல் (insert) பொத்தானைச் சொடக்கவும்.
- இணையத்தில் இருந்து படத்தினை உள்ளிடுவதற்கு -
- INSERT தாவலினைச் சொடக்குச் செய்யவும்.
- Illustrations குழவில் online pictures பொத்தானைச் சொடக்குச் செய்க.
- பின்னர் உங்களுக்குத் தேவைப்படும் படத்தினைத் திறக்கப்படுகின்ற தேடல் பொறியினைப் பயன்படுத்தித் தேடுக.
- படத்தைத் தெரிவு செய்து உள்ளிடல் பொத்தானைச் சொடக்குச் செய்க.

ஒரு படத்தினை வடிவமைத்தல்

நீங்கள் உள்ளிட்ட படத்தினைச் சொடக்குச் செய்யும் போது படக் கருவிகளின் (tools) கீழ் ஒரு புதிய வடிவமைத்தல் தாவல் (format tab) தோன்றுகின்றது. இந்தத் தாவல் (tab) படிமத்தின் பாணி மற்றும் தோற்றத்தினை மாற்றுவதற்கான பல எண்ணிக்கையிலான தெரிவுகளைக் கொண்டிருக்கின்றது.

- படிமத்தை வெட்டுதல் - படிமத்தின் தேவைப்படாத பகுதிகளை வெட்டுதல்.
    - படிமத்தைத் தெரிவு செய்தல்.
    - படக் கருவிகளின் (tools) கீழ் தோன்றுகின்ற வடிவமைத்தல் தாவலைச் (format tab) சொடக்குச் செய்க.
    - size குழவில் வெட்டுதல் (crop) கட்டளையைச் சொடக்குச் செய்க.
    - படிமத்தைச் சுற்றி வெட்டுகின்ற கையாளிகள் (cropping handles) தோன்றும். சொடக்குச் செய்து ஒரு கையாளியைப் பிடித்துப் படிமத்தின் தேவைப்படாத பகுதியை வெட்டுவதற்கு இழுக்க(drag).

- படிமத்தின் தோற்றம்
    - இத் தெரிவுகள் format தாவலில் adjust குழுவிலும் மற்றும் picture style குழுவிலும் கிடைக்கும்.
    - Adjust குழு– திருத்தங்கள் (Corrections), நிறம் (color), கலை நயமான விளைவுகள் (artistic effects)
    - Picture style குழு – சட்டகம் (frames), ஓரங்கள் (borders) போன்றவை

- சுற்று வாசகம் (Wrap text)
    - வாசகச் சுற்றமைப்பானது (Text-wrapping) வாக்கியத்தில் உள்ள சொல்லானது ஒரு ஓரத்தினை (படத்தின் அல்லது ஒரு வாசகப் பெட்டியின்) அடைகின்ற போது அது தானாகவே புதிய கோட்டில் ஆரம்பிக்கின்ற ஒரு சிறப்பியல்பாகும். இங்கு வேறுபட்ட தெரிவுகள் கிடைக்கும்.
    - படிமத்தைத் தெரிக.
    - படக் கருவிகளின் (tools) கீழ் தோன்றுகின்ற வடிவமைத்தல் தாவலை (format tab) சொடக்குச் செய்க. arrange குழுவில் wrap text கட்டளையைச் சொடக்கு செய்க.
    - அல்லது படிமத்தினை வலது சொடக்குச் செய்யும் போது தோன்றுகின்ற சூழமைவுப் பட்டியலில் (context menu) இருந்து wrap text தெரிவினைத் தெரிவு செய்க.

சொல் கலையை (Word Art) உள்ளிடல்

சொல் கலை கூடம் எந்த வாசகத்திற்கும் பிரயோகிக்கப்படக்கூடியதான வெவ்வேறான பாணியைக் கொண்டிருக்கின்றது.

- நீங்கள் சொல் கலையை (word art) உள்ளிட வேண்டிய இடத்தில் நிலைக்காட்டியை வைக்கவும்.
- INSERT தாவலைச் சொடக்குச் செய்யவும்.
- text குழுவில் word art பொத்தானைச் சொடக்குச் செய்து ஒரு word art பாணியைத் (style) தெரிவு செய்க. ஆவணத்தில் ஒரு இடம் பிடிப்பான் (placeholder) தோன்றுகின்றது.
- சொல் கலையில் (word art) உங்களுக்குக் காட்சியளிக்க வேண்டிய வாசகத்தைத் தட்டெழுத்திடுக.

- <u>சொல் கலையை வடிவமைத்தல் (Formatting word art)</u>

    - DRAWING கருவிகளுக்குக் கீழ் உள்ள FORMAT தாவலில் கிடைக்கக்கூடிய தெரிவுகளைப் பயன்படுத்துக. இப்பிரிவின் கீழ் நீங்கள் மாற்றக் கூடியதாக இருப்பது
        - Text fill
        - Text outline
        - Text effects

- **<u>வாசகப் பெட்டிகளை உள்ளிடல்</u>**

குறிப்பிட்ட வாசகத்திற்கு உங்கள் கவனத்தை ஈர்க்க வேண்டுமாயின் வாசகப் பெட்டியைப் பயன்படுத்தலாம்.

- நீங்கள் வாசகப் பெட்டியை (text box) உள்ளிட வேண்டிய இடத்தில் நிலைக்காட்டியை வைக்கவும்.
- உள்ளிடல் தாவலினைச் சொடக்கவும். text குழுவில் text box கட்டளை / உள்ளிடல் தாவலினைத் தெரிக → Illustration குழு → Shapes தெரிவுகள் → கூடத்தில் (gallery) இருந்து வாசக பெட்டியைத் (text box) தெரிக.
- வாசக பெட்டியை வரைக. Draw the text box.
- வாசக பெட்டியினுள் தோன்றி மறையும் நிலைக்காட்டி தோன்றும், பின்னர் வாசக பெட்டியினுள் தோன்ற வேண்டிய வாசகத்தை நீங்கள் தட்டெழுத்திட முடியும்.

- **<u>ஒரு வாசக பெட்டியை வடிவமைத்தல் (Formatting a text box)</u>**

    - வடிவத்தை மாற்றல் - Format tab → shapes குழுவை உள்ளிடுக → edit shape கட்டளையைத் தெரிக → பட்டியலில் change shape தெரிவைத் தெரிக மற்றும் விருப்பமான வடிவத்தைத் தெரிக.
    - வடிவத்தை நிரப்பும் நிறத்தை (shape fillcolor) மாற்றுக.
    - வடிவத்தின் உருவரையை (outline) மாற்றுக.
    - வடிவத்தில் நிழல்கள்(shadows), மின்னுதல்(glows) போன்ற விளைவுகளைச் சேர்க்க. (இவை shape effects தெரிவின் கீழ் பட்டியலிடப்பட்டுள்ளது.)
    - வாசகத்தின் வடிவத்தை மாற்றல் - FORMAT tab → word Art style குழு → text effects தெரிவுகள் → transform தெரிவு → உப பட்டியலில் இருந்து ஒரு விளைவினைத் (effect) தெரிக.

ஒரு அட்டவணையை உள்ளிடல்

ஒரு அட்டவணையை உள்ளிடுவதற்கு வேறுபட்ட வழிகள் உண்டு.

- கட்டத்தினைப் (grid) பயன்படுத்தல்
    - Insert tab → Tables குழு → table தெரிவு
    - அட்டவணை கட்டம் தோன்றுகின்றது → நிரல் மற்றும் நிரைகளின் எண்ணிக்கையைத் தெரிவு செய்வதற்குச் சுட்டியை இழுக்கவும்→ சுட்டி பொத்தானைச் சொடக்கவும்→ஆவணத்தில் வெறுமையான அட்டவணை உள்ளிடப்படும்.

- அட்டவணை உள்ளிடல் தெரிவினைப் பயன்படுத்தல்.
    - Insert tab → Tables group →insert table தெரிவு→ Insert Table உரையாடல் பெட்டி தோன்றும் → நிரைகளின் மற்றும் நிரல்களின் எண்ணிக்கையை நுழைக்க→ ok ஐ சொடக்குக→ ஆவணத்தில் வெறுமையான அட்டவணை உள்ளிடப்படும்.

- விரைவு அட்டவணைகள் பயன்படுத்தல்
    - Insert tab → Tables குழு → Quick Table தெரிவு → விருப்பமான மாதிரியைத் தெரிவு செய்தல்→அட்டவணையுடன் தெரிவு செய்யப்பட்ட மாதிரி உள்ளிடப் படல் → அட்டவணையில் உங்கள் தரவினை நுழைக்க.

- ஒரு விருப்ப அட்டவணையை (custom table) வரைதல்
    - Insert tab → Tables குழு → draw table தெரிவு → உங்களுக்குத் தேவைப்படும் நிரைகளையும் நிரல்களையும் வரைவதற்குச் சுட்டியைச் சொடக்கி இழுக்க.

- ஒரு அட்டவணைக்கு வாசகத்தை மாற்றல். Converting text to a table
    - வாசகத்தைத் தெரிதல். Select the text
    - Insert tab → Tables குழு → அட்டவணைக்கு வாசகத்தை மாற்றல் தெரிவைத் தெரிக → நிரைகளின் மற்றும் நிரல்களின் எண்ணிக்கையைத் தெரிவை தெரிக→ ok ஐ சொடக்குக→தெரிவு செய்யப்பட்ட வாசகம் அட்டவணையினுள் தோன்றும்.

ஒரு அட்டவணையை மாற்றியமைத்தல் (Modifying a table)

- நிரைகள் / நிரல்கள் / கலங்கள் உள்ளிடல்
    - நீங்கள் ஒரு புதிய வெறுமையான நிரை / நிரல் / கலம் உள்ளிட விரும்பிய இடத்தில் கலம், நிரை, நிரல் என்பவற்றைச் சொடக்குக.
      வலது சொடக்கு, சூழமைவு பட்டியலில் insert ஐத் தெரிவு செய்து பின்னர் பொருத்தமான உள்ளிடுதல் (insert) தெரிவினைத் தெரிவு செய்க.

      அல்லது
    - நீங்கள் ஒரு புதிய கலம், நிரை, நிரல் என்பவற்றை உள்ளிட விரும்பிய இடத்தில் நிரை / நிரல் / கலம் என்பவற்றைச் சொடக்குக → layout tab → rows and columns குழு → insert தெரிவினைத் தெரிக → கீழிறங்கு பட்டியலில் தேவைப்படும் தெரிவினைத் தெரிக.

- நிரைகள் / நிரல்கள் / கலங்கள் அழித்தல்
    - நீங்கள் அழிக்க விரும்பிய ஏற்கனவே காணப்படும் நிரை / நிரல் / கலம் என்பவற்றைக் கலம், நிரை, நிரல் இல் சொடக்குக
    - வலது சொடக்கு, சூழமைவு பட்டியலில் delete ஐத் தெரிவு செய்து பின்னர் பொருத்தமான அழித்தல் (delete) தெரிவினை அழித்தல் உரையாடல் பெட்டியில் இருந்து தெரிவு செய்க.
      அல்லது
    - நீங்கள் அழிக்க விரும்பிய ஏற்கனவே காணப்படும் நிரை / நிரல் / கலம் என்பவற்றைக் கலம், நிரை, நிரல் இல் சொடக்குக → layout tab → rows and columns குழு → delete தெரிவினைத் தெரிக → கீழ் விழும் பட்டியலில் தேவைப்படும் தெரிவினைத் தெரிக.

- ஒன்றிணைப்புக் கலங்கள் (Merging cells)
    - ஒன்றிணைக்கப்பட வேண்டிய கலங்களைத் தெரிவு செய்க → layout tab → merge குழுவில் ஒன்றிணைக்கும் கலங்கள் (merge cells) தெரிவினைக் சொடக்குக.

- பிளத்தல் கலங்கள் (Splitting cells)
    - பிளக்க வேண்டிய கலத்தைத் தெரிவு செய்க → layout tab→ merge குழுவில் பிளக்கும் கலங்கள்(split cells) தெரிவினைச் சொடக்குக→ split cells உரையாடல் பெட்டி தோன்றுகின்றது→நிரைகள் மற்றும் நிரல்கள் என்பவற்றின் எண்ணிக்கையைக் குறிப்பிடுக → ok ஐ சொடக்குக

ஒரு அட்டவணையை வடிவமைத்தல் (Formatting a table)

- அட்டவணை பாணி (Table styles)
    - அட்டவணையின் மேல் சொடுக்குக அல்லது அட்டவணையினைத் தெரிவு செய்க → Design tab→ table styles குழு→பிரயோகிக்கத் தேவையான பாணியைத் தெரிவு செய்க.

- நிரை உயரம் / நிரல் அகலம் மாற்றல்
    - மாற்ற வேண்டிய நிரை அல்லது நிரலில் சொடக்குச் செய்க.
    - layout tab ஐ சொடக்குச் செய்க → cell size குழுவில் →அட்டவணை நிரை உயரம் / நிரல் அகலம் சுருள் பெட்டியைச் சொடக்குக→ விருப்பமான அகலம் / உயரத்திற்கு மாற்றுக.

- எல்லைகளைப் பிரயோகித்தல் (Applying borders)
    - கலங்களைத் தெரிதல் / அட்டவணைக்கு எல்லைகளைப் பிரயோகித்தல் → design tab→ borders குழு, borders கீழ் விழும் பட்டியலின் அம்புக்குறிகளைச் சொடக்குக→ border ஐத் தெரிவு செய்க.
    அல்லது

    - கலங்கள் / அட்டவணையை border ஐ பிரயோகிக்கத் தெரிக → design tab → borders குழு →borders கீழ் விழும் பட்டியலின் அம்புக்குறிகளைச் சொடக்குக→ borders மற்றும் shading ஐ சொடுக்குக→ border setting, line style, line color, line width, shading ஐ shading தாவலில் இருந்து தெரிக மற்றும் ok ஐ சொடக்குக

பட்டியல்களைத் தயாரித்தல் (Creating lists)

- குண்டுக்குறிப் பட்டியல் (Bulleted list) – பட்டியலில் உருப்படிகளின் ஒழுங்குமுறை பற்றிய பிரச்சினை இல்லாத போது வழமையாகப் பயன்படுத்தப்படுகின்றது.
  - பட்டியலைத்(list) தெரிக → home தாவல்(tab)→ Paragraph குழு→ குண்டுக்குறி கீழிறங்கு பட்டியலை (bullets drop down menu) சொடக்குக→ Bullet கூடத்தில் இருந்து ஒரு bullet ஐத் தெரிக

- இலக்கப் பட்டியல் (Numbered list) – பட்டியலில் உருப்படிகளின் ஒழுங்குமுறை முக்கியமானதாக உள்ள போது வழமையாகப் பயன்படுத்தப்படுகின்றது. usually uses when the order of items is important.
  - பட்டியலைத்(list) தெரிக → home தாவல்(tab)→ Paragraph குழு→இலக்கங்கள் கீழிறங்கு பட்டியலை(numbers drop down menu) சொடக்குக→ Bullet கூடத்தில(gallery) இருந்து ஒரு bullet ஐத் தெரிக

எழுத்துக் கூட்டல் மற்றும் இலக்கணச் சரிபார்ப்பு (Spelling and grammar check)

- **இலக்கணப் பிழைகள்** – ஒரு நீல அலை அலையான கோடு இலக்கண பிழைகளைக் குறிக்கின்றது.

  எழுத்துக்கூட்டல் மற்றும் இலக்கணக் கருவி ஆகியவை முழு ஆவணத்திலும் அல்லது ஆவணத்தின் ஒரு பகுதியில் எழுத்துக்கூட்டல் மற்றும் இலக்கணப் பிழைகள் தொடர்பாகச் சரிபார்ப்பதற்கு உங்களை அனுமதிக்கின்றது.

- **எழுத்துக்கூட்டல் பிழைகள்(Spelling mistakes)** - ஒரு சிவப்பு அலை அலையான கோடு தவறாக எழுத்துக்கூட்டப்பட்ட சொற் பிழைகளைக் குறிக்கின்றது.
  - நீங்கள் எழுத்துக் கூட்டல் சரிபார்க்கத் தொடங்குவதற்கு வேண்டிய இடத்தில் நிலைக்காட்டியை வைக்கவும்.
  - REVIEW தாவலை சொடக்குக→ Proofing குழு→ Spelling & Grammar பொத்தானைச் சொடக்குக→ஆவண சாளரத்தின் வலது பக்கத்தில் எழுத்துக் கூட்டல் பணி சாளரப்பிரிவு (Spelling task pane) தோன்றும்

  - தவறாக எழுத்துக்கூட்டப்பட்ட வாசகம் அடையாளப்படுத்தப்பட்டு (highlighted) பரிந்துரைகள் (suggestions) பரிந்துரைப் பெட்டியில்(suggestions box) காட்சிப்படுத்தப்படும்.
    - பரிந்துரைப் பெட்டியில் (suggestions box) சரியாக எழுத்துக் கூட்டப்பட்ட வாசகத்தைச் சொடக்குக.
    - வாசகத்தை மாற்றுவதற்கு change ஐ சொடக்குக அல்லது முழு ஆவணத்திலும் வாசகத்தை மாற்றுவதற்கு change all ஐ சொடக்குக.
    - திருத்தம் தேவைப்படாத போது ignore ஐ சொடக்குக அல்லது ஆவணம் முழுவதும் தெரிவு செய்யப்பட்ட வாசகம் சகல சந்தர்ப்பங்களிலும் மாற்றப்படாது ஆனால் ஆவணம் தொடர்ந்து சரி பார்ப்புச் செய்யப்படுவதற்கு Ignore All ஐ சொடக்குக.

- add to ஐச் சொடக்குக. தெரிவு செய்யப்பட்ட வாசகத்தை அகராதியில் புதிய வாசகமாக உள்ளடக்கவும்.
- எழுத்துக் கூட்டல் சரிபார்ப்பு நிறைவடைந்தவுடன் தோன்றும் செய்தியானது திருத்தங்கள் நிறைவு பெற்றமை பற்றிக் கூறும். OK ஐ சொடுக்குவதன் மூலம் நீங்கள் ஆவணத்தைத் தொடர முடியும்.

- **நிகண்டு (Thesaurus)** - இது தரப்பட்ட சொல்லின் இணைச்சொற்கள் பட்டியலைத் தருகின்றது மற்றும் ஒரு சொல்லை இப்பட்டியலில் தரப்பட்ட அதே போன்ற சொல்லினால் மாற்றீடு செய்யவும் முடியும்.
    - நீங்கள் இணைச்சொற்கள் பெற வேண்டிய சொல்லைத் தெரிவு செய்க.
    - REVIEW தாவலைச் சொடக்குக→ Proofing குழுவில் Thesaurus ஐ சொடக்குக→ ஆவண சாளரத்திற்கு வலது பக்கத்தில் நிகண்டு பணி சாளரப்பிரிவு (Thesaurus task pane) தோன்றும்
    - இணைச்சொற்களின் பட்டியலில் இருந்து ஒரு சொல்லைத் தெரிவு செய்க →அதன் மேலாகச் சுட்டியை நகர்த்தவும், insert ஐ சொடக்கவும் அல்லது கீழிறங்கு பட்டியலில் இருந்து பிரதி செய்யவும் → தெரிவு செய்யப்பட்ட சொல்லை அதற்கு மாற்றீடு செய்யவும்.
- எழுத்துருத் தட்டு மாற்றம் (Change case) – ஏற்கனவே தட்டெழுத்திடப்பட்ட வாசகத்தின் தோற்றத்தை(பெரிய(Capital) சிறிய(Simple)) மாற்றல்.
    - நீங்கள் எழுத்துரு தட்டு மாற்றம் செய்ய வேண்டிய வாசகத்தைத் தெரிவு செய்க → Home தாவலைச் சொடக்குக→ Font குழுவில் Change Case ஐ சொடக்குச் செய்க→விருப்பமான தெரிவைத் தெரிவு செய்க
        - **Sentence case** – வாக்கியத்தின் முதல் எழுத்தினைப் பெரிய எழுத்தாக்குவதற்கும் (capitalize) மற்றும் ஏனைய மற்றைய எழுத்துக்கள் சிறிய எழுத்துக்களாகவும்(lowercase) விடப்படும். சொடக்குக.
        - **lowercase** - உங்கள் வாசகத்தில் இருந்து பெரிய எழுத்துக்கள் நீக்கப்படும். சொடக்குக.
        - **UPPERCASE** - சகல எழுத்துக்களும் பெரிய எழுத்துக்களாகும். சொடக்குக.
        - **Capitalize Each Word** – ஒவ்வொரு சொல்லிலும் முதல் எழுத்துப் பெரிய எழுத்தாக மாற்றப்படும். ஏனைய மற்றைய எழுத்துக்கள் யாவும் சிறிய எழுத்துக்களாகவே இருக்கும். சொடக்குக.
        - **tOGGLEcASE** - சிறிய எழுத்துரு தட்டு எழுத்துக்களுக்கு பெரிய எழுத்துரு தட்டுக்களையும் மற்றும் பெரிய எழுத்துரு தட்டு எழுத்துக்களுக்கு சிறிய எழுத்துருத் தட்டுக்களையும் மாற்றும்.

தேர்ச்சி: 4 தொடரி, தெரிவு என்பன அடங்கிய எளிய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு பாய்ச்சற்கோட்டு வரைபடத்தினைப் பயன்படுத்துவார் மற்றும் செய்நிரல்களை விருத்தி செய்வார். (ஸ்க்ரட்ச் பயன்படுத்தல்)

தேர்ச்சி மட்டம்: **4.1.** பிரச்சினையினைப் பகுப்பாய்வு செய்வார்

பாடவேளைகள் : 02

கற்றல் பேறுகள்:

- நாளாந்த வாழ்வில் எதிர்கொள்ளும் எளிய பிரச்சினைகளைப் பகுப்பாய்வு செய்வார்.
- பிரச்சினையினைத் தொகுதி வரைபடம் ஊடாக விபரிப்பார்.
- செல்லிட மற்றும் சூட்டிகைக் கருவிகளின் பிரயோகங்கள் பற்றி விளக்குவார்.

விடய உள்ளடக்கம்:

- உள்ளீடு, முறைவழியாக்கம், வெளியீடு என்பவற்றின் படிநிலைகளை அடையாளம் காணல்.
- செல்லிட மற்றும் சூட்டிகைக் கருவிகள் என்பவற்றின் பிரயோகங்களினை அடையாளம் காணல்.
- பாய்ச்சற் கோட்டு வரைபடத்தினைப் பயன்படுத்தித் தீர்வுகளை ஆவணப்படுத்தல்.

எண்ணக் கருக்களும் முதன்மைப் பதங்களும்:

- பிரச்சினையைப் பகுப்பாய்தல்
- தொகுதி வரைபடம் (Block diagram)
- இனங் காணல்.
- பாய்ச்சற் கோட்டுப் வரைபடம் (Flow chart)

பாடத் திட்டமிடலுக்கான வழிகாட்டி :

- மாணவர்களுடன் கட்டுப்பாட்டு அமைப்புப் பற்றிக் கலந்துரையாடவும். (தொடரி, தெரிவு, மீள்செயல்). மாணவர்களைக் குழுக்களாகப் பிரிக்க. அவர்கள் எதிர்கொண்டு பகுப்பாய்வு செய்து தீர்க்கக் கூடிய பிரச்சினை ஒன்றைக் கேட்கவும். மாணவர்கள் குழுக்களிடம் அப்பிரச்சினையைப் பாய்ச்சற் கோட்டு வரைபடத்துடன் பிரதிநிதித்துவப் படுத்தும்படி கூறவும்.

கணிப்பீட்டிற்கும் மதிப்பீட்டிற்குமான வழிகாட்டி :

- மாணவர் குழுவிற்குப் பகுப்பாய்வதற்கு ஒரு பிரச்சினையைக் கொடுக்கவும். அப்பிரச் சினையைப் பாய்ச்சற் கோட்டு வரைபடத்துடன் பிரதிநிதித்துவப் படுத்தும்படி கூறவும்.

தரவிருத்தி உள்ளீடுகள்:

- செயற்பாட்டுத் தாள் (Activity Sheet)
- https://www.tutorialspoint.com/programming_methodologies/programming_methodologies_flowchart_elements.htm

வாசிப்புப் பத்திரம்:

பகுப்பாய்வுச் சிந்தனையைப் பாய்ச்சற் கோட்டுப் படத்துடன் பிரதிநிதித்துவப் படுத்தல் (தொடரி, தெரிவு மட்டும்)

நாளந்த அடிப்படையிலேயே சகல தீர்மானங்களும் எடுக்கப்படுகின்றது. எனக்குக் காலை உணவிற்கு என்ன வேண்டும்? நான் இந்த வார இறுதியில் எங்கே போக வேண்டும்? நாங்கள் ஒவ்வொரு முறையும் சில அளவு கோல்களின் அடிப்படையிலான ஒரு தீர்மானத்தை மேற்கொள்கின்றோம். தீர்மானத்தை எடுத்த பின்னர் அதனைச் செயற்படுத்துகின்றோம். இதனால் தீர்மானம் மேற்கொள்வது இரண்டு படி செயல்முறைகளாகும் – முதலில் ஒரு அளவு கோலின் அடிப்படையில் என்ன செய்ய வேண்டும் என்பதைத் தீர்மானித்தல். பின்னர் செயற்படுதல் இரண்டாவது படியாகும்.

தெரிவுக் கட்டுப்பாட்டு அமைப்பானது நிபந்தனை சரியாயின் ஒரு தொகுதிக் கூற்றுக்களை நிறைவேற்ற அனுமதிக்கின்றது. மற்றைய தொகுதிச் செயல்கள் நிபந்தனை பிழையாயின் நிறைவேற்றப்படும்.

நியம நிறங்களிலான (சிவப்பு, மஞ்சள் (amber) மற்றும் பச்சை) ஒளிகளைக் காட்சிப்படுத்துவதன் மூலம் பயனர்களின் செல்லும் உரிமையைப் போக்குவரத்து விளக்குகள் மாற்றுகின்றன.

- பச்சை ஒளி குறிக்கப்பட்ட திசையில் பயணம் தொடர்ந்து இடம் பெற அனுமதிக்கின்றது.
- மஞ்சள் ஒளி சமிக்ஞையானது சிவப்பாக மாறப் போவதை எச்சரிக்கின்றது.
- சிவப்பு ஒளி குறிக்கப்பட்ட திசையில் பயணம் தொடர்ந்து இடம் பெற அனுமதிக்காது.
- சிவப்பு ஒளி தோன்றினால் சாரதிகள் வாகனங்களை நிறுத்துவார்கள் அவ்வாறு இல்லாவிடின் தொடர்ந்து செல்லுவார்கள்.

படம் 4.1.1 நிற ஒளிகள்

- வீதியில் ஒவ்வொரு சமிக்ஞையும் வாகனங்களைச் சரியான வழியில் வழி நடத்துகின்றன. இது தெரிவிற்கான உதாரணங்களில் ஒன்றாகும்.

குறிப்பிட்ட நிபந்தனையினைப் பொறுத்து தெரிவானது(Selection) வேறுபட்ட கூற்றுகளை நிறைவேற்றுவதற்குப் பயன்படுகின்றது. தெரிவிற்கான பாய்ச்சற்கோட்டுப் படத்தின் குறியீடு பின்வருமாறு.



படம் 4.1.2 தெரிவின் பாய்ச்சற் கோட்டு குறியீடுகள்

உதாரணம் 1:

பாடசாலைக்கு நெடுஞ்சாலை வீதியினூ டாகச் செல்லுதல்.

வீதிக்கு செல்க.

சமிக்ஞையைப் பார்க்கவும்.

சமிக்ஞை ஒளியானது பச்சையாயின் அதே வழியில் செல்க.

இல்லாவிடின் சிறிது நேரம் காத்திருக் கவும்.



படம் 4.1.3 உதாரணம் 1 இன் பாய்ச்சற் கோட்டுப் படம்

உதாரணம் 2:

வீட்டுப்பாட வேலை செய்தல் மாணவர்களின் நிகழ் நேர பிரச்சினைகளில் ஒன்றாகும். பெரும்பான்மையான சிறுவர்களுக்கு வீட்டுப் பாட வேலை பெரிய பிரச்சினையாகும். அவர்கள் இதனை வழமையாக மிகவும் கடைசி நேரத்தில் செய்து முடிப்பதற்கு வைத்திருப்பார்கள். முதலில் இப்பிரச்சினையை அவர்களாக எவ்வாறு தீர்ப்பது என்பது பற்றிப் பகுத்தாராய்க. பின்னர் பிரச்சினையின் தீர்வுக்கான ஒரு பாய்ச்சற் கோட்டுப் படத்தை வரைக.

வீட்டிற்கு செல்க

உங்களுக்கு வீட்டுப்பாடவேலை இருக்கின்றதா எனச் சோதிக்க.

அவ்வாறு இல்லையாயின் விளையாடுங்கள்

அல்லது படியுங்கள்

இல்லையெனில் வீட்டுப்பாட வேலை செய்ய ஆரம்பியுங்கள்.



படம் 4.1.4 உதாரணம் 2 இன் பாய்ச்சற் கோட்டுப் படம்

உதாரணம் 3:

தரப்பட்ட புள்ளிகள் 50 இனை விட அதிகமாயின் “Pass” எனவும் அல்லது “Fail” எனவும் காட்சிப்படுத்துதல்.

புள்ளிகளைப் பெறுக.

அது 50 இனை விட அதிகமா எனப் பரிசோதிக்க.

அது 50 இனை விட அதிகமாயின் “சித்தி” என்பதைக் காட்சிப்படுத்துக.
அவ்வாறு இல்லையெனில் “சித்தி இன்மை” என்பதைக் காட்சிப்படுத்துக.



படம் 4.1.5 உதாரணம் 3 இன் பாய்ச்சற் கோட்டுப் படம்

உதாரணம் 4:

தரப்பட்ட புள்ளிகள் 50 இனை விட அதிகமாயின் பச்சைக் கோட்டையும் அல்லது சிவப்புக் கோட்டையும் வரைக.

புள்ளிகளைப் பெறுக.

அது 50 இனை விட அதிகமா எனப் பரிசோதிக்க.

அது 50 இனை விட அதிகமாயின் பச்சைக் கோட்டை வரைக இல்லையெனில் சிவப்புக்கோட்டை வரைக.



படம் 4.1.6 உதாரணம் 4 இன் பாய்ச்சற் கோட்டுப் படம்

தேர்ச்சி : 4 தொடரி, தெரிவு என்பன அடங்கிய எளிய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு பாய்ச்சற் கோட்டுவரைபடத்தினைப் பயன்படுத்துவார் மற்றும் செய்நிரல்களை விருத்தி செய்வார் (ஸ்கரட்ச் பயன்படுத்தல்)

தேர்ச்சிமட்டம் : 4.2. எளிய செய்நிரலினை விருத்தி செய்வதற்குக் கட்டுப்பாட்டு அமைப்புக்களைப் பயன்படுத்துவார்.

பாடவேளைகள்: 05

கற்றல் பேறுகள்:

- கட்டுப்பாட்டு அமைப்புக்களை விபரிப்பார் (தெரிவு மட்டும்)
- நாளாந்த வாழ்வில் ஏற்படும எளிய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குக் கட்டுப்பாட்டுக் கட்டமைப்புக்களைப் பிரயோகிப்பார்.

விடய உள்ளடக்கம்:

- எளிய நெறிமுறை மற்றும் தெரிவுகளின் கட்டுப்பாட்டுக் கட்டமைப்பு என்பவற்றின் அறிமுகம்.
- கட்புல செய்நிரலாக்க மொழியின் உதவியுடன் எளிய (தொடரி மற்றும் தெரிவு உள்ளடங்கலாக) செய்நிரலொன்றின் விருத்தி

எண்ணக்கருக்களும் முதன்மைப் பதங்களும்:

- கட்டுப்பாட்டு அமைப்பு (Control Structure)
- தொடர் (Sequence)
- தெரிவு (Selection)
- நெறிமுறை(Algorithm)
- ஸகரட்ச் செய்நிரல் (Scratch Program)
- ஸகரட்ச் செய்நிரல் தெரிவு (Scratch Program selection)

பாடத்திட்டமிடலுக்கான வழிகாட்டி:

- கட்டுப்பாட்டு அமைப்புடன் எவ்வாறு ஒரு பிரச்சினையை எதிர் கொள்வது எனக் கலந்துரையாடவும் (தெரிவு).
- கட்டுப்பாட்டு அமைப்புப் பற்றிக் கலந்துரையாடவும் (தொடர், தெரிவு, மீள்செயல்)
- மாணவர்களைக் குழுக்களாகப் பிரிக்க மற்றும் பகுப்பாய்வதற்கு ஒரு சூழ்நிலை யினை (scenario) வழங்கவும்.
- மேலே உள்ள சூழ்நிலையிற்கான ஸகரட்ச் செய்நிரலினைச் செய்யுமாறு குழுக்களைக் கேட்கவும்.

கணிப்பீட்டிற்கும் மதிப்பீட்டிற்குமான வழிகாட்டி:

- ஒவ்வொரு குழுவிற்கும் பின்வரும் செயற்பாடுகளை ஒப்படைக்கவும்.
  - தெரிவுக் கட்டுப்பாட்டுக்கான ஒரு பொருத்தமான சூழ்நிலையினை எழுதுதல்.
  - நெறிமுறைகளுடன் பிரச்சினையைத் தீர்த்தல்.
  - பாய்ச்சற் கோட்டை வரைந்து ஸ்கரட்ச்சினைச் செய்தல்.

தரவிருத்தி உள்ளீடுகள்:

ஸ்கரட்ச் செய்நிரல் (Scratch program), செயற்பாட்டுத் தாள்(Task sheet)

- https://scratch.mit.edu/download
- https://www.youtube.com/watch?v=0aCYwtQFV0c

வாசிப்புப் பத்திரம்

நிரலாக்கத்தில் தெரிவு மிக முக்கியமான எண்ணக்கருவாகும். தெரிவுக் கூற்றுக்களைப் பயன்படுத்தித் தீர்மானங்களை எடுப்பதற்கு எங்கள் நிரலாக்கங்களைப் பெறமுடியும். ஒரு கணினியின் தீர்மானம் ஒரே விதமான இருபடி செயன்முறையின் அடிப்படையினால் மேற் கொள்ளப்படும். ஸ்கரட்சில் தீர்மானங்கள் "if "தொகுதிகளினால் மற்றும் "if else" தொகுதிகளினால் செய்யப்படுகின்றன." if" கூற்றினை முறைவழிப்படுத்தும் போது கணினி முதலில் சில அளவுகோல்களை அல்லது நிபந்தனைகளை மதிப்பிடுகின்றது. அதனை அடைந்தால் குறிப்பிட்ட செயல் நடைபெறும். தெரிவிற்கான தொகுதிகள் இங்கே காணப்படுகின்றன.





படம் 4.2.1 தெரிவின் தொகுதிகள்(Blocks)

உதாரணம் 1:

தரப்பட்ட புள்ளிகள் 50 இனை விட அதிகமாயின் பச்சைக் கோட்டையும் அல்லது சிவப்புக் கோட்டையும் வரைக.

மேலே உள்ள சூழ்நிலை ஏற்கனவே பாய்ச்சற் கோட்டுப்படத்துடன் பகுப்பாயப்பட்டுள்ளது. பின்வரும் தொகுதிகள் ஸகரட்ச்சில் வடிவமைக்கப்பட்டுள்ளன.



படம் 4.2.2 உதாரணம் 1 இன் தொகுதிகள்(Blocks)



படம் 4.2.3 உதாரணத்தின் 1 இன் வெளியீடு

உதாரணம் 2:

தரப்பட்ட புள்ளிகள் 50 இனை விட அதிகமாயின் “Pass” எனவும் அல்லது “Fail” எனவும் காட்சிப்படுத்துதல்.



படம் 4.2.4 உதாரணம் 2 இன் தொகுதிகள்(Blocks)



படம் 4.2.4 உதாரணம் 2 இன் வெளியீடு

உதாரணம் 3:

தரப்பட்ட இலக்கம் ஒற்றையாயின் ஒற்றை இலக்கம் (“Odd Number ”)எனவும் அல்லது இரட்டை இலக்கம்(“Even Number”) எனக் காட்சிப்படுத்தல்.



படம் 4.2.5 உதாரணம் 3 இன் தொகுதிகள்(Blocks)



படம் 4.2.6 *உதாரணம் 3 இன் வெளியீடு*

தேர்ச்சி 5: செய்நிரல் தர்க்கங்களைப் செயல்படுத்துவதற்கு பௌதீக கணித்தல் மென்பொருள் பொதியைப் பயன்படுத்துவார்

தேர்ச்சி மட்டம் : 5.1 பௌதீகக் கணித்தல்களைச் செய்வதற்கு எளிய வன்பொருள் சாதனத்தைப் பயன்படுத்துவார்.

பாடவேளைகள் :05

கற்றல் பேறுகள்:

- வெளிவாரியான சுற்றின் இரண்டு தர்க்க மட்டங்களினை செயற்படுத்தக் கூடியவாறான செய்நிரலொன்றினை வடிவமைப்பார்.
- பௌதீகக் கருவிகளில் செய்நிரல்களை அமுல்படுத்தல். உதாரணம்- பெறுமதிகளை வழங்கி LED இனை ஒளிரச் செய்தல்)

விடய உள்ளடக்கம்:

- பௌதீகக் கணித்தல் சாதனத்தின் கூறுகள்
- கட்டுப்பாட்டுக் கருவிகள்
- LED களை ஒளிரச் செய்தலும் அணைத்தலும்
- எளிய செய்நிரலினை கொண்டு LED கோலங்களை உருவாக்குதல்

எண்ணக்கருக்களும் முதன்மைப் பதங்களும் :

- பல்வேறு வகையான நுண் கட்டுப்படுத்திச் சுற்றுகளை அவதானித்தல்
- நுண் கட்டுப்படுத்திச் சுற்றின் அடிப்படைக் கூறுகள்
- இரு நிலைத் தர்க்கத்தைப் பயன்படுத்தி வெளிவாரிச் சுற்றுக் களை இயக்குவதற்கான செய்நிரலொன்றினை உருவாக்கல் (ஆம் / இல்லை)
- பௌதீக சாதனங்களில் செய்நிரலை செயற்படுத்துவார். உதாரணம்: பெறுமானங்களைக் கடத்தி LED களை ஒளிரச் செய்தலும் அணைத்தலும்

பாடத்திட்டமிடலுக்கான வழிகாட்டி

- பல்வேறு வகையான நுண் கட்டுப்படுத்திச் சுற்றுகள் பற்றிய தகவல்களைச் சேகரிக்கவும்.
- மைக்ரோபிட் சுற்றையும் அதன் கூறுகளையும் விபரிக்கவும்
- LED ஒளிரச் செய்வதன் மூலம் வாசகங்களையும் எண் பெறுமானங்களையும் காட்டுவதற்கான செய்நிரல்களை உருவாக்கவும்
- சுற்றிலுள்ள பொத்தான்கள் அழுத்தப்படுவதற்கமைவான வெவ்வேறு பெறுமானங்களைக் காட்டவும்.

கணிப்பீட்டிற்கும் மதிப்பீட்டிற்குமான வழிகாட்டி

- மைக்ரோபிட்டின் பொத்தான் ஒன்று அழுத்தப்படும் போது உமது பெயர் காட்சிப்படுத்தப்படுவதற்கான செய்நிரலொன்றை மைக்ரோபிட் சுற்றிற்கு எழுதவும்
- சுற்றிலுள்ள பொத்தான்கள் இரண்டினதும் இணைந்த வேறுபட்ட செயற்பாடுகளுக்கு அமைவான வெவ்வேறு பெறுமானங்களைக் காட்டுவதற்கான செய்நிரலொன்றை எழுதவும்.

தரவிருத்தி உள்ளீடுகள்

- கணினி, மைக்ரோபிட் சுற்று, இணைப்பு வடம், இணையத்திலிருந்து பதிவிறக்கப்பட்ட மென்பொருள்
- https://makecode.microbit.org/
- https://microbit.org/guide/
- https://www.youtube.com/watch?v=Wuza5WXiMkc
- https://www.youtube.com/watch?v=cJRrTxgLRIc

வாசிப்புப் பத்திரம்

பல்வேறு வகையான நுண் கட்டுப்படுத்திச் சுற்றுகள்

- மைக்ரோபிட் சுற்று (Micro Bit circuit)



படம் 5.1.1 மைக்ரோ பிட் சுற்று

இயல்புகள்

- தனித்தனியாகச் செய்நிரலாக்கல் செய்யக்கூடிய 25 எல் இ டி க்கள் (25 LEDs)
- செய்நிரலாக்கல் செய்யக்கூடிய பொத்தான்கள் 2
- பௌதீக இணைப்பு ஊசிகள்
- ஒளி மற்றும் வெப்பநிலை உணரிகள்
- அசைவு உணரிகள் (ஆர்முடுகல்மானி மற்றும் திசைக்காட்டி)
- வானொலி(Radio) மற்றும் ஊடலையூடாக(Bluetooth) வடமில்லாத் தொடர்பாடல்
- USB இடைமுகம்

- Arduino UNO பலகை

படம் 5.1..2 2 Arduino UNO பலகை

இயல்புகள்

- நுண் கட்டுப்படுத்தி (Microcontroller): ATmega328P
- 32 KB விரைவு நினைவகம் (32 KB of Flash memory)
- செயற்படு மின்னழுத்தம்: 5V (Operating Voltage: 5V)
- உள்ளீட்டு மின்னழுத்தம்: 7-12V (Input Voltage (recommended): 7-12V)
- உள்ளீட்டு மின்னழுத்த (வரையறை): 6-20V (Input Voltage (limits): 6-20V)
- இலக்கமுறை உள்ளீட்டு /வெளியீட்டு ஊசிகள் 14 (6 ஊசிகள் PWM வெளியீட்டைத் தருகின்றது) (Digital I/O Pins: 14 (6 pins provide PWM output))
- ஒப்புமை உள்ளீட்டு ஊசிகள்: 6 (Analog Input Pins: 6)
- உள்ளீடு /வெளியீடு ஊசியிற்கான நேர் மின் 40 mA (DC Current per I/O Pin: 40 mA)
- 3.3V ஊசியிற்கான நேர் மின் : 50 mA.(DC Current for 3.3V Pin: 50 mA).

அட்மெல் நுண் செயலிகளுடன் பலகைகள் (Boards with Atmel Micro processors)

படம் 5.1..3 பலகையுடன் Atmel Micro செயலி

Micro Bit நுண்கட்டுப்படுத்தி (microcontroller) சுற்றுடன் குறிமுறையிடல்

Micro Bit சுற்றிற்குக் குறிமுறையிடல் செய்வதற்கான பதிப்பியைக் (editor) கீழுள்ள வலைத் தளத்தைப் பயன்படுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

https://makecode.microbit.org/

மேலுள்ள முகவரியூடாகப் பதிப்பி (MakeCode editor) திறக்கப்பட்டதும், முகவரிப் பட்டியிலுள்ள சிறுபடத்தை இழுத்து desktop சிறுபடமொன்றை உருவாக்கவும்.

அடுத்த முறை Micro Bit பதிப்பியைப் பெற்றுக் கொள்வதற்கு வலைத் தளத்திற்குச் செல்லாது இக் சிறுபடத்தின் மூலம் பதிப்பியைத் திறக்கலாம்.

பதிப்பி **MakeCode** ஆனது **HTML5** வலைப் பிரயோகமாகும். நீங்கள் உங்கள் தேடு பொறியினூடாக முதலில் பார்த்தவுடனேயே அது தானகவே வன்தட்டில் காப்பிடப்படும். வலை பிரயோகம் ஏற்றப்பட்டவுடன நீங்கள் எல்லாவற்றையும் உங்கள் வன்தட்டில் வைத்திருக்க வேண்டும். அது நீங்கள் இணையத் தொடர்பின்றித் வேலையைத் தொடர்வதற்குத் தேவைப்படும்.

நீங்கள் பின்வரும் பதிப்பியுடனான திரையைப் பெற்றிருக்கலாம்



படம் 5.1..4 மைக்ரோ பிட் பதிப்பியுடன் திரை

இதில் Blocks மற்றும் JavaScript() ஆகிய இரு முறைகள் காணப்படுகின்றன. ஆரம்ப நிலை பயனர்களுக்கு JavaScript() கடினமாக அமைவதால் அதனைத் தெரிவு செய்யக்கூடாது.

இப் பதிப்பி பல்வேறு கட்டுப்பாட்டுத் தொகுதிகளை வழங்குகிறது. அவை Basic, Input, Music, Led, Radio, Loops, Logic, Variables and Math எனும் தலைப்புகளில் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

பின்வரும் குழுக்கள் “Advanced” எனும் தெரிவின் மூலம் பெற்றுக் கொள்ளக்கூடியதாக உள்ளது.

Functions, Arrays, Text, Game, Images, Pins, Serial and Control. போன்றவை காணப்படுகின்றன

மைக்ரோ பிட் சுற்று நிரலாக்கம்



படம் 5.1..5 *Advanced option இன் கீழ் கிடைக்கக்கூடிய குழக்கள்*

ஒவ்வொரு குழுவின் கீழும் பல கட்டுப்பாட்டுத் தொகுதிகள் காணப்படுகின்றன.

அடிப்படை வகையில் உள்ள கட்டுப்பாட்டுத் தொகுதிகள்



படம் 5.1..6 *அடிப்படை வகையில் கட்டுப்பாட்டு தொகுதிகள்*

"… more" பொத்தானின் கீழ் மேலதிக தொகுதிகள் காணப்படுகின்றன. அவை கீழே காட்டப்பட்டுள்ளன.



படம் 5.1..7 “...more” பொத்தானிற்கு கீழ் உள்ள தொகுதிகள்

உள்ளீட்டு வகையின் கட்டுப்பாட்டுத் தொகுதிகள்



படம் 5.1..8 உள்ளீட்டு வகையில் உள்ள கட்டுப்பாட்டு தொகுதிகள்

இதேபோல் ஒவ்வொரு வகையிலும் பல கட்டுப்பாட்டுத் தொகுதிகள் உள்ளன. இப்பொழுது மைக்ரோபிட் சுற்றுக்கான நிரலாக்கத் திட்டத்தினை உருவாக்குவோம்.

உதாரணம் 01

மைக்ரோபிட் சுற்றில் காணப்படும் ஒளிகாலும் இருவாயியினைப் பயன்படுத்தி வாசகம் ஒன்றினைக் காட்சிப்படுத்துதல்.

உள்ளீட்டுக் குழுவின் கீழ் காணப்படும் கட்டுப்பாட்டுத் தொகுதி “On Button A Press” என்பதைத் தெரிவு செய்து கீழ்காட்டப்பட்டவாறு அதனைச் செயல்நிரல் பிரதேசத்திற்குள் இழுத்து விடவும்.



படம் 5.1.9 நிரலாக்கப்பகுதியில் இருந்து “On Button A Press” கட்டுப்பாட்டுத் தொகுதியைத் தெரிந்து இழுத்து விட்ட பின்னர்

“On Button A Pressed”,இல் காணப்படும் A பொத்தானை அழுத்தும் போது நீங்கள் B மற்றும் A+B இன் மேலும் பல பொத்தான்கள் தோன்றும். ஒளிகாலும் இருவாயிகள் காணப்படும் இடத்தின் இடதுபக்கத்தில் A மற்றும் ஒளிகாலும் இருவாயிகள் காணப்படும் இடத்தின் வலது பக்கத்தில் B பொத்தானும் காணப்படும். இங்கு A+B என்பது இரு பொத்தான்களும் அழுத்தப்பட்டிருப்பதைக் குறிக்கும்.

உதாரணமாக எந்தவொரு பொத்தானிலும் மாற்றத்தினைச் செய்யாமல் A இனை அப்படியே வைத்திருக்கவும்.

பின்னர் அடிப்படைக் குழு (Basic group) என்பதில் காணப்படும் Show String” என்னும் தொகுதியினைத் தெரிவு செய்யவும். கீழே காட்டப்பட்டுள்ள செய்நிரலாக்கத்தை உருவாக்குவதற்கு முன்னைய “On Button A Pressed” தொகுதியின் நடுப்பகுதியில் “Show String” தொகுதியினை இழுத்துவிடவும்.





படம் 5.1.10 "Show String" தொகுதியைத் தெரிவு செய்து On Button A Pressed" இன் மத்தியில் இழுத்து விட்ட பின்னர்

"Show String" துண்டத்தில் காணப்படும் வாககத்தினை "ICT Grade 8" என மாற்றவும். இப்பொழுது பின்வருமாறு செய்நிரல் அமையும்.



படம் 5.1.11 "Show String" தொகுதிக்கு "ICT Grade 8". வாசகத்தை மாற்றிய பின்னர்

இப்போது இந்த எளிய செய்நிரல் நிறைவடைந்துள்ளது. தற்போது காணப்படும் செயல்நிரலின் பெயர் Untitled எனக் காணப்படுகின்றது இதனை MyPro01 என மாற்றவேண்டும். hex கோப்பாக தரவிறக்கும் கோப்பில் சேமிப்பதற்கு Untitled என்பதை அழித்துவிட்டு தரவிறக்கும் பொத்தானை அழுத்தவும். Hex கோப்பின் உள்ளடக்கமானது குறித்த செயல்நிரலின் பட அடிப்படையிலான இரும குறிமுறையினால் பிரதிநிதுத்துவப்படுகின்றது. குறித்த hex கோப்பானது மைக்ரோபிட் சுற்றிற்கு பதிவேற்றப்படுகின்றது. தரவிறக்கக் கோப்புறையில் “microbit-MyPro01.hex” என்னும் கோப்புக் காணப்படும்



படம் 5.1.12 USB வடத்தின் ஊடாக மைக்ரோ பிட் சுற்று செருகப்பட்ட போது

சுற்றினைப் பயன்படுத்தி செய்நிரலை செயற்படுத்த இந்த hex கோப்பானது மைக்ரோபிட் சுற்றிற்குக் கட்டாயமாகத் தரவேற்றம் செய்யப்படல் வேண்டும். USB துறையினுடாக மைக்ரோபிட் சுற்றினைக் கணினியுடன் இணைக்கும் போது, கீழ்காட்டப்பட்டவாறு புதிய செலுத்தியின் (driver) கோப்புறையினுள் இரண்டு கோப்புகள் காணப்படும். G என்னும் எழுத்துக்குப் பதிலாக வேறு எழுத்துக்களும் காணப்படலாம்.



படம் 5.1.13 மைக்ரோ பிட் சுற்று செருகப்பட்ட பின் கோப்புக்கள் புதிய வட்டில் காட்டப்படுகின்றது.

குறித்த கோப்புறை காணப்படாவிட்டால் சுற்றினைத் தொடர்பறுத்து பின் மீண்டும் செருகவும். உருவாக்கிய கோப்பின் பிரதியினை இக்கோப்புறையினுள் இடவும். இப்பொழுது மைக்கிரோ பிட் சுற்றின் ஒளிகாலும் இருவாயிகள் hex கோப்பினைத் தரவேற்றும் வரை விரைவாக சிமிட்டியபடி காணப்டும்.

இப்போது குறித்த சுற்றின் மறுபக்கத்திற்குத் திருப்பி இரண்டு பொத்தான்களையும் அடையாளம் காணவும். A பொத்தானை அழுத்தவும். தற்போது ஒளிகாலும் இருவாயி கட்டத்தில் வாசகம் செல்வதினை அவதானிக்களாம். இது உங்கள் தகவல் “ICT Grade 8”என்று கூறுகின்றது.

உதாரணம் 2 : MyPro02

கீழ்காட்டப்பட்டவாறு மேல் வடிவமைத்த செயல்நிரலை மாற்றவும். பொத்தானை அழுத்தும் போது உமது பெயரினைக் காட்சிப்படுத்துவதற்கான குறிமுறையினை எழுதவும். செய்நிரலுக்கான பெயர் MyPro02 என இடவும்.



படம் 5.1. 14 உதாரணம் 2 இற்கான தொகுதிகள்

உதாரணம் 3 : MyPro03

இந்த செய்நிரலில் "on button pressed" இன் இன்னுமொரு தொகுதி பயன்படுத்தப்படுகின்றது. இங்கு A+B ஆகிய இரண்டு பொத்தான்களும் ஒரே நேரத்தில் அழுத்தப்படுகின்றன. அடிப்படைக் குழுவில் காணப்படும் (Basic category) "show leds" என்பதினைத் தெரிவு செய்து "on button A+B pressed". துண்டத்தின் நடுவில் விடவும்.



படம் 5.1.15. உதாரணம் 3 இற்கான தொகுதிகள்

செய்நிரலினைத் தரவேற்றம் செய்து இரண்டு பொத்தான்களையும் அழுத்தும் போது ஒளிகாலும் இருவாயி சட்டகத்தில் தோன்றும் கோலத்தினை அவதானிக்கவும்.

உதாரணம் 04 Mypro04

கீழ்க்காணப்படும் செய்நிரல் மூன்று தொகுதிகளைக் கொண்டது. இங்கு “on shake” என்னும் தொகுதியானது உள்ளீட்டு வகையிலிருந்து (Input category) தெரிவு செய்யப்பட்டது. “Shake” என்பதன் விருப்புத் தெரிவில் (option) அடுத்த தொகுதி “Screen Up” எனவும் “Screen own” எனவும் மாற்றப்பட்டது.



படம் 5.1.16 உதாரணம் 4 இற்கான தொகுதிகள்

செய்நிரலினைத்க தரவேற்றம் செய்த பின்னர் மைக்ரோபிட் சுற்றினை அசைக்கும் போது ஒளிகாலும் இருவாயி கட்டத்தில் தோன்றும் கோலத்தினை அவதானிக்கவும். பின்னர் மேலாகவும் கீழாகவும் சுற்றினைக் கொண்டு செல்லும் போது வேறு விதமான கோலத்தினை அவதானிக்கலாம்.

உதாரணம் 05: MyPro05



படம் 5.1.17 உதாரணம் 5 இற்கான தொகுதிகள்

கீழ்காட்டப்பட்ட செய்நிரல்களில் தேவையான தொகுதிகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. புதிய செயற்திட்டத்தினைக் கருதும் போது இது திரையில் தோன்றுவதற்குப் பொருத்தமானது. Basic category இல் "pause (ms) 100" இது காணப்படும். இங்கு கடத்தல் மாறியானது (pause value) 10 மில்லி செக்கன்களாக மாற்றிடப்படுகின்றது.

உதாரணம் 05: MyPro06



படம் 5.1. 18 உதாரணம் 6 இற்கான தொகுதிகள்

உமது சொந்த முயற்சியில், வெவ்வேறு நேர இடைவெளிகளிகளான ஒளிகாலும் ஒருவாயியின் கோலங்களை உருவாக்குக.

தேர்ச்சி : 6 இணையத்தைப் பயன்படுத்திக் கல்வி பற்றிய தகவல்களை ஆராய்வார்

தேர்ச்சி மட்டம்: 6.1 இணையத்தில் தகவல்களைத் தேடுவார்

பாடவேளை: 1

கற்றல் பேறுகள்:

- தேடு பொறிகளை அடையாளம் காண்பார்.
- இணையத்தைப் பயன்படுத்தித் தகவல்களைத் தேடுவார்.

விடய உள்ளடக்கம்:

- தேடு பொறிகள்: கூகிள்(Google), யகூ(Yahoo) போன்றன.
- கல்வி சார் வலை மேலோடிகள்

எண்ணக் கருக்களும் முதன்மைப் பதங்களும்:

- இணையம் (Internet)
- தேடு பொறிகள் (Search Engines)
- மேலோடிகள் (Browsers)
- கல்வி சார் வலை மேலோடிகள்(Educational browsers)
- வலைத்தளம் (Website)

பாடத் திட்டமிடலுக்கான வழிகாட்டி:

- இணையத்தின் அடிப்படைகளை விளக்கவும்.
- மாணவர்களைக் குழுக்களாகப் பிரிக்கவும்.
- தரப்பட்ட பணிக்குத் தேடு பொறியில் தேடுவதற்கு அறிவுறுத்தல்களை வழங்கவும்.

கணிப்பீட்டிற்கும் மதிப்பீட்டிற்குமான வழிகாட்டி:

- புதிய விடயம் அல்லது செய்திட்டத்திற்காக தகவல்களை ஆய்வு செய்யவதற்குப் பிள்ளைகளைத் தேடு பொறியைப் பயன்படுத்துமாறு கேட்கலாம். ஒவ்வொரு தேடுதலும் எவ்வளவு முடிவுகளைக் கொண்டு வருகின்றது என்பதை அவர்கள் கவனிக்க முடியும். அவர்களின் சொல்லின் தேடல் சொல் சற்று வித்தியாசமாக இருந்தால் வேறுபட்ட முடிவுகளை மீண்டும் பெறுவார்களா? ஏன் இப்படி நடைபெறக்கூடும் என்பதைக் கலந்துரையாடுக.

தரவிருத்தி உள்ளீடுகள்:

- இணையத் தொடர்புடனான கணினி
- https://www.computerhope.com/issues/ch000082.htm
- https://www.techopedia.com/definition/288/web-browser

வாசிப்புப் பத்திரம்

இணையம்

உலகத்தை சுற்றியுள்ள கணினிகள் ஒவ்வொன்றும் ஒன்றுடன் ஒன்று இணைக்கப்பட்டு இணையம் உருவாக்கபட்டுள்ளது. இது ஒரு மில்லியன் எண்ணிக்கையிலான கணினிகளை இணைக்கும் உலகளாவிய வலையமைப்பாகும். நீங்கள் வலைத்தளங்களை மற்றும் சில பயன்பாடுகளைப் (apps) பயன்படுத்தும் போது நீங்கள் இணையத்தைப் பயன்படுத்துவீர்கள்.

இணையத்திற்கு இணைத்தல்.

இணையத்தில் இணைப்பதற்கு பின்வருவன தேவைப்படுகின்றன.

- ஒரு கணினி
- மோடெம் / தொலைபேசி இணைப்பு / வன்பூட்டு(dongle)/ அருகலை திசைவி (Wi-Fi Router)
- இணைய சேவை வழங்குநர் (ISP- உதாரணம் :- டயலொக், மொபிடல், டெலிகொம்)
- வலை மேலோடி (Web browser)(உதாரணம் :-கூகிள் குரோம், சபாரி, ஒபேரா, இன்டர்நெட் எக்ஸ்புளோரர், பயர்பொக்ஸ்)
  அல்லது
- இணைய இணைப்புடனான சூட்டிகைத் தொலைபேசி (Smart Phone)

நீங்கள் இணையத்தில் என்ன செய்ய முடியும்?

இணையத்தில் பல விடயங்களைச் செய்வதற்கு முடியும். உங்களால் செய்யக் கூடியது :

- வலைத்தளங்களில் உலாவுதல்.
- மின்னஞ்சலினை அனுப்புதல் மற்றும் பெறுதல்.
- ஊடகக் கோப்புக்களைப் பதிவிறக்கம் செய்தல். உதாரணம்: எம்பி 3(Mp3)அல்லது காணொளி கோப்புகள்.
- காணொளி ஓடையைப் பார்வையிடுக. உதாரணம்: BBC ஐ இயக்கி (BBC iPlayer), யூ டியூப் (YouTube) போன்றவை.
- உங்கள் வங்கி மீதியைச் சரிபார்த்தல் மற்றும் கொடுப்பனவுகளைச் செய்தல்.
- தொடரறா கடைகளில்(online shops) இருந்து பொருட்களை வாங்குதல்.
- உங்கள் பாடசாலை மெய்நிகர் கற்றல் சூழலில் (VLE - Virtual Learning Environment) இருந்து கல்வி சார் பொருள்களை(educational material) அணுகுதல்.
- வலை அடிப்படையிலான பிரயோகங்களைப் பயன்படுத்தி உங்கள் ஆவணங்களை உருவாக்குக, சேமிக்க மற்றும் பகிர்தல் செய்தல். உதாரணம்: கூகிள் டொக்ஸ்(Google Docs)
- சமூக வலைப்பின்னல் தளங்களில் நண்பர்களுடன் தொடர்பு ஏற்படுத்துதல். உதாரணம்: இசிபெபோ(egBebo), மைஸ்பேஸ்(MySpace), முகப்புத்தகம் (Facebook) போன்றவை.
- ஒரு வலைப்பதிவு (blog) எழுதுதல்.
